விலை சதம் 70

★ ★

பக்கங்கள் — 10

பாவியுங்கள் [illegible]
நாள் [illegible]
நறுமணக் கமழும்
அண்ணா பத்தி
ஜெயந்தி பத்தி
கஜானா பத்தி

# ஈழநாடு
## வார மலர்

**THE EELANADU VARAMALAR**

மில்க்வைற் செய்தி-
இதழ்-58
வண. தனிநாயக அடிகள்
சிறப்புமலர்
10 மில்க்வைற் நீலசோப் அல்லது 2 பார்சோப் அல்லது 2 சலவைப் பவுடர் மேலுறைகளை அனுப்பி மேற்படி புதிய சிறப்பு மலரைப் பெற்றுக்கொள்ளுங்கள்.
மில்க்வைற்
யாழ்ப்பாணம்

மலர் 22 | புரட்டாதி 26 | ஜுல்ஹஜ் 2 | ஞாயிற்றுக்கிழமை | (12—10—80) | இதழ் 243

## வடக்கு அல்ஜீரியாவில் பயங்கர பூகம்பம்
## 20,000 பேர் பலி; $2\frac{1}{2}$ லட்சம் பேர் காயம்; ஒரு நகரம் அழிவு!

அல்ஜியர்ஸ், அக். 11
வடக்கு அல்ஜீரியாவில் நேற்று இடம்பெற்ற பயங்கரப் பூகம்பத்தில் இருபதாயிரம் பேர் மாண்டனரென அறிவிக்கப்பட்டுள்ளது.

இக்கோரப் பூகம்பத்தினால் இரண்டரை லட்சம் மக்கள் காயமடைந்தனர் என்றும், பெருந்தொகையானோர் வீடுகளை இழந்துள்ளனர் என்றும் அறிவிக்கப்பட்டது.

ஒரு லட்சம் பேருக்கு மேல் வாழும் அல்-அஸ்ரம் பட்டினமே இப்பூகம்பத்தினால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், இந்நகரில் உள்ள கட்டடங்கள் யாவும் இடிந்து சின்னாபின்னமாகியுள்ளன என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இடிபாடுகளுக்குள் அகப்பட்டுள்ள மனிதச் சடலங்களை மீட்பதில் மீட்புப் படையினர் தீவிரமாக ஈடுபட்டுவருகின்றனர்.

இப்பூகம்பத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்குமாறு சர்வதேச அல்ஜீரிய செஞ்சிலுவைச் சங்கங்கள் உலக நாடுகளைக் கோரியுள்ளன.

# ஈரானுக்கு சிரியா, லிபியா
# வடகொரியா ஆயுத சப்ளை?

## ராஜீய உறவுகளை ஈராக் ரத்துச்செய்தது
### அபடான் நகரை நோக்கி ஈராக் படைகள் முன்னேற்றம்

(லண்டன்)

**சிரியா, லிபியா, வடகொரியா ஆகிய நாடுகள் ஈரானுக்கு இரகசியமாக ஆயுதம் கொடுத்துதவுவதாக ஈராக் குற்றஞ்சாட்டியுள்ளது.**

**இதன் காரணமாக ஈராக் மேற்படி நாடுகளுடனான ராஜீய உறவுகளைத் துண்டித்துக்கொண்டு விட்டது.**

ஈரானின் பிரதான எண்ணை நிலையங்களிருக்கும் அபடான் நகரை நோக்கி, ஈராக் படைகள் முன்னேறிக்கொண்டிருப்பதாகவும், இப்படைகள் மீது ஈரானிய ஹெலிகொப்டர்கள் குண்டுவீசித் தாக்குவதாகவும், இதேசமயம், ஈராக் படைகள் ஒரு ஹெலிகொப்டரைச் சுட்டுவீழ்த்தியதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. கலோன் நதி நீரிணைப்பை ஈராக் படைகள் தாண்டிச் சென்றுகொண்டிருப்பதாகவும் ஈராக் படைகள் முன்னேறிக்கொண்டிருப்பினும் ஈரான் துருப்புகள் கடும் எதிர்ப்புக் கொடுத்து வருவதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

ஹோம் பினன்ஸ்
லிமிட்.
82, கன்னதிட்டி றேட், யாழ்ப்பாணம்.
வருடாந்தம் ஆகக்கூடுதலான
25% வட்டியை
வழங்குகின்றது
ரூபா 1000/-க்கு மேற்பட்ட
எந்த முதலீட்டிற்கும்
மாதாந்தம் வட்டி வழங்கப்படும்
உங்கள் பணத்தை
விவேகமாக
முதலீடு செய்யுங்கள்
தலைமையகம்:
463, காலி வீதி கொழும்பு-3.
தொலைபேசி : 89190

ஈராக் வெளிவிவகார அமைச்சு இவ்வாறு குற்றஞ்சாட்டியிருப்பதாக சவூதி அரேபியா வானொலிச் செய்தி வெளியிட்டிருக்கிறது,

இதே சமயம் சிரியா, லிபியா, கொரியா ஆகியநாடுகளிலுள்ளதனது தூதரகங்களை முடிவிடுவதாக ஈராக் அறிவித்துள்ளது. சிரியா-லிபிய- ராஜதந்திரிகள் 48 மணித்தியாலங்களுக்குள் நாட்டைவிட்டு வெளியேற வேண்டும் என்றும் வடகொரியா ராஜதந்திரிகள் 72 மணித்தியாலங்களுக்குள் வேளியேற வேண்டும் என்றும் ஈராக் உத்தரவிட்டுள்ளது.

### லிபியாவின் ஆதரவு

இதேசமயம் லிபியா ஈரானுக்கு உதவிசெய்யப்போவதாக அதிர் கேணல் கடாபி கூறியிருப்பதாக ஒரு செய்தி கூறுகின்றது.

லிபியா ஈரானுக்கு ஆயுத உதவி செல்யுமாகில் இதனால் பாரதூரமான விளைவுகள் ஏற்படுமென அமெரிக்க அதிபர் கார்ட்டர் எச்சரிக்கை விடுத்திருப்பதாகவும் தெரிகிறது.

## ஐ.நா.வில் பிரதிநிதித்துவம் கிடைக்கும் நிலை வகுப்போம்
### இராஜாராம் வரவேற்பில் 'அமிர்'

(யாழ்ப்பாணம்)

''உலகில் வாழும் 6 கோடி தமிழ் பக்களுக்கு ஒரு சுதந்திர நாடு அமைத்து ஐ. நா.சபையில் தமிழ் ஈழ பிரதிநிதித்துவம் கிடைக்கும் நிலையை வகுப்போம்''

யாழ். மாநகரசபை தமிழ் நாடு சபாநாயர் திரு. இராஜாராமுக்கு அளித்த வரவேற்பில் எதிர்க்கட்சித்தலைவர் திரு. ஏ. அமிர்தலிங்கம் மேற்கண்டவாறு கூறினார்.

முதல்வர் திரு. இராஜா விஸ்வநாதன் தலைமையில் நடந்த இவ்வரவேற்பில், திரு. அமிர்தலிங்கம் மேலும் கூறியதாவது: தமிழ்நாடு தலைவர்களான கருணாநிதி, நெடுஞ்செழியன், ம. பொ.

(10ம் பக்கம் பார்க்க)

## திறந்த வெளியில் இன்றைய கூட்டம்

[யாழ்ப்பாணம்[

முன்னாள் பிரதம மந்திரி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவின் குடியுரிமை ரத்துசெய்யப்பட விருப்பதை எதிர்த்து சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் ஆதரவில் பல எதிர்க் கட்சிகள் கலந்துகொள்ளும் பொதுக்கூட்டம் இன்று மாலை திறந்தவெளியரங்கில் முன்னாள் மேல்நீதிமன்ற நீதிபதி திரு. ரி. ஜே. ராஜரத்தினம் தலைமையில் நடைபெறும்.

தென்னிலங்கையிலிருந்து ஹரிஸ்பத்துவ எம். பி. திரு. ஆர். பி. விஜயசிறி, கம்பஹா எம். பி. திரு. எஸ். டி. பண்டாரநாயக்கா ஆகியவர்களும் கலந்து கொள்வர்.

## "ஜனநாயக விரோத சக்திகளுக்கு எதிராகக் கடும் நடவடிக்கை"
### விரைவில் சட்டம் வரும் என்கிறார் ஜனாதிபதி

(கொழும்பு)

''நாட்டில் இயங்கிவரும் ஜனநாயக விரோதச் சக்திகளுக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்கும்பொருட்டு விரைவில் புதிய கடுமையான சட்டங்கள் இயற்றப்படும்.''

இவ்வாறு ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜயவர்த்தனா இரத்மலானையில் நடைபெற்ற இராணுவ வீரர்கள் தினம் தொடர்பான வைபவத்தில் பேசுகையில் கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:

''இன்று நாட்டில் இயங்கிவரும் ஜனநாயக விரோதச் சக்திகளின் செயல்களை அரசு ஒருபோதும் அனுமதிக்காது. மக்களால் தெரிசெய்யப்பட்ட அரசு, மக்களாலேயே அகற்றப்படும் வரை அதைப் பாதுகாக்கவேண்டியது பாதுகாப்புப் படைகளினது கடமையாகும்,''

பாதுகாப்புப் படைகள் மீது இன்றைய அரசு பூரண நம்பிக்கை கொண்டுள்ளது. அந்த நம்பிக்கையை சிதறவிடாது அரசாங்கத்தைப் பாதுகாக்க வேண்டியது பாதுகாப்புப்படைகளின் கடமையாகும்.'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரு. எம். பி. எடுத்துச்சென்ற கல்லும் களிமண்ணும் அதிகாரிகளுக்குக் காட்டுவார்

[பச்சிலைப்பள்ளி]

பருத்தித்துறை பாராளுமன்ற உறுப்பினர் திரு. க. துரைரத்தினம் தனது தேர்தல் தொகுதியிலுள்ள பருத்தித்துறை கிழக்குப் பகுதிக்குச் சென்றிருந்த போது, வீதிஓரத்தில் காணப்பட்ட கொங்கிறீட் கல், களிமண் ஆகியவற்றின் மாதிரிகளை ஜீப்பில் எடுத்துச் சென்றுர்.

சுயவீடமைப்புத் திட்டத்தின் கீழ் மருதன்கேணிப் பகுதியில் அமைக்கப்பட்டு வரும் வீடுகளுக்கு நியம முறைப்படி அரியப்படாத கொங்கிறீற் கற்கள் வீட்டு உரிமையாளருக்கு விநியோகிக்கப்படுவதை எம். பி. கண்டதாகவும் இந்தக் கற்களை தாமே கைகளினுல் உடைத்துப் பார்த்து அதிருப்தி அடைந்த நிலையில் வீடமைப்புத் திணைக்கள அதிகாரிகளுக்கு முறையீடு செய்வதற்காக ஒரு கொங்கிறீற் கல்லை ஜீப்பில் எடுத்துச் சென்றதாகவும் தெரிகிறது.

இப்பகுதியில் அமைக்கப்பட்டு வரும் வீதிக்குப் போடுகின்ற களிமண்ணும் தரமற்று இருப்பதாகக் கூறி, அதனையும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குக் காண்பிப்பதற்காக ஒரு பையில், சிறிது களிமண்ணை எம். பி. எடுத்துச் சென்றுள்ளார்.

## சங்காபிஷேகம்

[புலோலி]

துன்னுலை வடக்கு ஆயில் நின்றெல்லை விநாயகராலயத்தின் சங்காபிஷேகம் இன்று 12-ம் திகதி நடைபெறவுள்ளது.

ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் ஆலயப் பிரதம குரு ஸ்ரீலஸ்ரீ இராமச்சந்திரக் குருக்கள் இச்சங்காபிஷேகத்தை நடாத்தி வைப்பார்.

# மகளின் பிரிவுதாங்காது தாயும் தற்கொலை

(பச்சிலைப்பள்ளி)

நான்கு மாதங்களுக்கு முன்பு தனக்குத் தானே தீ மூட்டித் தற்கொலை செய்துகொண்ட தன் மகளின் பிரிவைத் தாங்க முடியாத தாய், நஞ்சருந்தித் தற்கொலை செய்துகொண்டார்.

இச்சம்பவம் பளைப் பொலிஸ் பகுதியைச் சேர்ந்த வத்திராயன் என்னுமிடத்தில் நடைபெற்றது. இதே இடத்தைச் சேர்ந்த திருமதி ஐயாத்துரை செல்லமணி (வயது 38) என்பவரே நஞ்சருந்தி தற்கொலை செய்துகொண்டவராவார்.

நான்கு மாதங்களுக்கு முன்னர் இவரது 16 வயதுடைய மகள் தனக்குத்தானே தீமூட்டித் தற்கொலை செய்துகொண்டதாகவும், இதனுல் இறந்தவர் கவலையடைந்து இருந்ததாகவும், 'அடிக்கடி ''நஞ்சு குடிப்பேன்'' எனக் கூறி வந்ததாகவும் விசாரணையின் போது தெரியவந்தது.

மரண விசாரணையின் போது இறந்தவருடைய மூத்த மகள், தந்தை ஆகியோர் சாட்சியமளித்தனர். பொலிஸ் கான்ஸ்டபிள் திரு. கே. சூரியப்பிரகாசம் சாட்சிகளை ஆஜர் செய்தார். மரண விசாரணை நடத்திய மரண விசாரணை அதிகாரி திரு. கே. எஸ். இராசையா தற்கொலை எனத் தீர்ப்பளித்தார்.

## பயிற்சி

3 மாத மோட்டார் மெக்கானிக் டிப்ளோமா பயிற்சி 27-10-1980ல் ஆரம்பமாகின்றது. Institute of Engineering Technology 9/1 Stanley Road Jaffna. 7043

# விசேஷ விற்பனை

கீழே குறிப்பிட்ட பொருட்கள் எம்மிடம் விற்பனைக்கு உண்டு. இதனை வாங்க விரும்புவோர் எமது கணக்காளரிடம் ரூபா 2-00 செலுத்தி கேள்விப்பத்திரம் வாங்கி அரக்கு முத்திரை இட்டு பதிவுத்தபாலில் ஐப்பசி 22-ம் திகதி பகல் இரண்டுமணிக்கு முதல் அனுப்பிவைக்கவும். அல்லது எம்மிடமுள்ள பிரத்தியேகமாக ஒதுக்கப்பட்ட பெட்டியில் அவற்றைப் போட்டுவிடவும்.

அனுப்பும்பொழுது காகித மேலுறையில் இடது பக்கத்தில் என்ன பொருட்களை கோருகிறீர்கள் எனக் குறிப்பிட்டு அனுப்பவும்.

பொருட்கள் யாவும் 13-ம் திகதி தொடங்கி எமது ஸ்தாபனத்தில் வேலை நேரங்களில் பார்வையிடலாம்.

(1) மோட்டராகவும், நீர் இறைக்கும் இயந்திரமாகவும் மாற்றியமைக்கக்கூடிய 6 HP 3000 RPM உள்ளிணைப் படகு பெற்றர் இயந்திரம் (Petter)
(அ) கியர் பெட்டி இல்லாதது இரண்டு.
(ஆ) கியர்பெட்டி உடையது இரண்டு.

(2) வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட வெல்டிங் ரான்ஸ்பொமர் 240 Amp இரண்டு

(3) பாவித்த ஏ.சி.15 HB2100 RPM மோட்டர் ஒன்று.

பொது முகாமையாளர்
இலங்கை நோர்வே அபிவிருத்தித்திட்டம்
துறைமுகம், காரைநகர். (7062)

## அரசாங்க கேள்வி அறிவித்தல்

பண்ணையிலுள்ள உடைந்த கற்களை ஏற்றி அனுப்புவதற்கும், பண்ணை தாம்போதியின் ஒரு பகுதியை விஸ்தரித்து அதன் குழாய் வாயில்களை அதிகமாக்குவதற்கும் ரூபா 100,000/- க்கும் அதற்கு மேலும் பதிவுசெய்துள்ள ஒப்பந்தக்காரர்களிடமிருந்து கேள்விகள்கோரப்படுகின்றன.

கேள்விப்பத்திரங்கள் விநியோகிப்பதற்கான கடைசித் திகதி 17-10-80. கேள்விப்பத்திர முடிவுத் திகதி 24-10-80. மேலதிக விபரங்களை 761, பீச்றோட், யாழ்ப்பாணம்விலாசத்திலுள்ள பெருந்தெருக்கள் பிரதம பொறியியலாளர் அலுவலகத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

எஸ். கணேசரத்தினம்
பிரதம பொறியியலாளர்,
(பெருந்தெருக்கள்)
யாழ்ப்பாணம்,
9-10-80 7064

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

''வில்லியர்ஸ்'' 2 அங்குல நீரிறைக்கும் பம்ப் விற்பனைக்குண்டு. தொடர்பு; கந்தையா, 6, ஆடியபாத றேட், கொக்குவில் மேற்கு. 7037

வவுனியா பம்பை மடுவில் மன்னர் றேட்டிலிருந்து நாலரை மைல் தூரத்தில் நான்கு ஏக்கர் தோட்டக் காணி பெரிய கிணறு, கனி மரங்களுடன் விற்பனைக்குண்டு. தொடர்புகொள்ளவும்: இராஜதுரை, 54 6, கொழும்புத்துறை வீதி, பாண்டியன்தாழ்வு, யாழ்ப்பாணம். 7038

யாழ். இந்துக்கல்லூரிக்கு அருகாமையில் சகல வசதிகளுடன் 465 1, காங்கேசன்துறை வீதியில் கிட்டத்தட்ட 1½ பரப்புக் காணியில் இரண்டு வீடுகள் உள்ளன. தனித்தும் அல்லது ஒருமித்தும் கொடுக்கப்படும். தொடர்பு கொள்ளவும்: சி. கனகரத்தினம், 465/1, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். 7066

டாக்டரின் பாவிப்பில்உள்ள புத்தம் புதிய இத்தாலியன் வெஸ்பா ஸ்கூட்டர் விற்பனைக்குண்டு. ஆயிரம் கிலோமீட்டர் மட்டும் ஓடியது. விலை ரூபா 16,000/- தொடர்பு கொள்க: 'அம்பாள் வாசம்'' உடுவில் மேற்கு, சுன்னுகம், 7061

பண்ணுகம் முறிவு நோய் வைத்தியர் திருமதி. மாணிக்கம் வீட்டுக்கு முன்பாகவுள்ள இராசா வீதியிலுள்ள திருமதி தையல் கணேசன் என்பவருக்கு சொந்தமான 5 பரப்புக் காணியும், வீடும் விற்பனைக்கு உண்டு. நேரில் வரவும். 7067

டச்சு றேட் உடுவிலில் 5 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: N. சின்னத்தம்பி, டச்சு றேட், உடுவில். 7045

## ஏல விற்பனை

ஏறத்தாழ 4'' X 2'' அளவினதான 270 கைமரங்கள் (பனை) 16-10-1980ந் திகதிவியாழக்கிழமை காலை 10-00 மணியளவில் பல்கலைக்கழக வளவின் பின் வாசலுக்கு எதிராக ஏலத்தில் விற்கப்படும். கைமரங்களை அன்று காலை 9-00மணியிலிருந்து பார்வையிடலாம். ஏலத்தில் கொள்வனவு செய்யப்படும் பொருட்களுக்கு உடனடியாகக் கொடுப்பனவு செய்து இவற்றை இருநாட்களுக்குள் அவ்விடத்திலிருந்து அகற்றுதல் வேண்டும்.

பதிவாளர்
யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம்,
இலங்கை,
திருநெல்வேலி,
10-10-80. 7068

## வீடுகள் வாடகைக்குத் தேவை

காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலைக்கு அண்மையில் இரண்டு மைல் சுற்றுடலில் தண்ணீர், மின்சார வசதிகளுடன் கூடிய (இரண்டு அறைக்கு மேற்பட்ட) வீடுகள் வாடகைக்குத் தேவைப்படுகின்றன. வீட்டு உரிமையாளர்கள் கீழ் தரப்படும் முகவரிக்குத் தொடர்பு கொள்ளவும்.

திட்ட முகாமையாளர்
மூன்றும் கட்ட
அபிவிருத்திப் பகுதி,
காங்கேசன் சீமெந்துத்
தொழிற்சாலை
காங்கேசன்துறை.
7070

## விற்பனைக்கு

திருநெல்வேலி சந்தைக்கு அண்மையில் 1 1/2 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. விபரங்கட்கு: மு. பரமானந்தம் (பழனி), உடையார் லேன், கொக்குவில் கிழக்கு, கொக்குவில். 7053

பெரிய கண்ணுடி அலுமாரி-2, சிறிய கண்ணுடி சோக்கேஸ்-2 விற்பனைக்கு உண்டு. தொடர்புகொள்ள வேண்டிய விலாசம்: வருத்துப்பளை வைத்தியசாலை, 245, ஸ்ரான்லி றேட், யாழ்ப்பாணம். 7050

இரும்புப்பெட்டி இரண்டு (2) நல்ல ஒரிஜினல் திண்டுக்கல் உற்பத்தி. நேரில் பார்வையிடவும். பெண்லி ஜுவலர்ஸ், 74, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 7049

## தேவை

அண்மையில் ஆரம்பிக்கப்படவிருக்கும் கல்லூரிக்கு சகல துறைகளிலும் தகுதியுள்ள ஆசிரியர்கள் தேவைப்படுகிறுர்கள். விபரங்களுடன் கடித மூலம் விண்ணப்பிக்கவும், மேசை, தளபாடங்கள் உற்பத்தியாளர்கள் தமது விலை விபரங்களை அறிவிக்கவும். கடிதத் தொடர்புகள் அந்தரங்கமாகப் பேணப்படும். Academy of Advanced Studies, 252, பருத்தித்துறை வீதி, நல்லூர். 6958

அனுபவமுள்ள தேங்காய் எண்ணெய் வார்ப்பு மேற்பார்வையாளரும், சவர்க்கார தயாரிப்பாளரும், கணக்கு விகிதரும், தட்டச்சாளரும் தேவை. கடிதத் தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி: முகாமையாளர் சாம் இன்ரநாசனல் கொம்பனி, கல்லூரி வீதி, பருத்தித்துறை. 7063

யாழ்ப்பாணச் சைவ வேளாள குலத்து மாமனர், கொழும்பிலுள்ள பிரசித்தி பெற்றதாபனம் ஒன்றில்வேலை பார்க்கும் தனது 26 வயது மருமகனுக்கு (B. Sc. பொறியியலாளர் உயரம் 5' 7½'', எட்டில் செவ்வாய்) மணப்பெண் தேடுகின்றுர். நியாயமான சீதனமுள்ள 24 வயதிற்குட்பட்ட, படித்த, அழகுள்ள பெண்களே ஜாதகத்துடனும், முழு விபரங்களுடனும் விண்ணப்பிக்கலாம். M. P. 666, C/o P. O. Box. 1135 Colombo 7035

C & W Accountancy படித்த உத்தியோகமாயுள்ள 29 வயது இந்து வேளாள குலப் பெண்ணுக்குத் தகுந்த மணமகன் தேவை. 10 லட்சம் பெறுமதியுள்ள வீடு, வளவு, பணம் கொடுக்கப்படும். Accountants, Engineers, C.A.S. Officers போன்ற தரத்தில் உள்ளோர் விரும்பத்தக்கது. சாதகக் குறிப்புடன் விண்ணப்பிக்கவும். விளம்பரல. 7020, C/o ஈழநாடு லிமிட்; யாழ்ப்பாணம். 7020

## வகுப்புகள்

பரதநாட்டிய சாஸ்திரிய முறைப்படி கற்றுக்கொடுக்கப்படும். புதிய நடன வகுப்புகள் 19-10-80 ஞாயிற்றுக்கிழமை காலை 9-05 மணிக்கு ஆரம்பிக்கப்படும். விபரங்களுக்கு நேரில் தொடர்புகொள்ளவும். செல்வி அன்னபூரணி முத்துக்குமாரன், அதிபர், நாட்டியவிசாரதா, (சென்னை) 411/2, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். 7048

திரைவானில் ஓர் புதுமை! ஈழத்துத் திரையுலகில் திருப்புமுனை!!

## றெபின் தம்பு தயாரிக்கும் புதிய தமிழ்ப் படம்

# நடிக, நடிகையர் விண்ணப்பிக்கவும்

16 சிங்களப் படங்களைத் தயாரித்தும், டைரக்ட் செய்தும், சிறந்த படத்திற்கான பரிசு பெற்றும் புகழீட்டிய திரு. றெபின் தம்பு அவர்கள் இரு இந்திய நட்சத்திரங்களுடன் தயாரிக்கவிருக்கும் புதிய தமிழ்ப்படத்திற்கு உள்ளூர் நடிக, நடிகையர் தேவை.

ஒவ்வொருவரும், தங்கள் புகைப்படங்களுடன், நடிப்பு அனுபவங்களையும் எழுதி, 15 நாட்களுக்குள் விண்ணப்பிக்கவும்.

தொடர்புகொள்ளவேண்டிய முகவரி:

திரு. றெபின் தம்பு,
சாந்தி சினிமா, யாழ்ப்பாணம்.

தயாரிப்பு & டைரக்ஷன்
றெபின் தம்பு.
7036

திரைக்கதை, வசனம்
ம. க. அ. அந்தனிசில்,
ஆசிரியர்: 'நிப்பொறி'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துளிகள்

— வரதர் —

தமிழர் கூட்டணிக்கு ஒன்றுபோக அடுத்த தலையிடி தயாராகக் காத்திருக்கும்!

கூட்டணித் தலைவர்களின் நிலையை 'ஐயோ பாவம்!' என்று நினைக்கத் தோன்றும்— எங்களைப்போன்றவர்களுக்கு அப்படி ஒரு நினைப்பு.

அரசியல் என்றாலே தலையிடிகளின் தொடர்ச்சிதான்.

அரசியல்வாதிகளுக்கு அவை சாதாரண விஷயங்கள்!

தலையிடிகள் இல்லாவிட்டால் அரசியல்வாதிகளுக்குச் சப்பென்று போய்விடும்.

கூட்டணிக்கு இப்போது வந்திருக்கும் தலையிடியை — மற்றவைகளைப்போலச் சாதாரணமாக ஒதுக்கிவிட முடியாது!

இராமாயணத்தை நடத்துவதற்கு ஒரு மான் வந்தது— மாரீசமான்!

கூட்டணியின் தலைவிதியை நிர்ணயிப்பதற்கும் ஒரு 'மான்' வந்திருக்கிறது.

இதற்கு ''மாவட்ட அபிவிருத்திச் சபை'' என்று பெயர்.

ஐ. தே. க. வினர் இதைப் 'பொன்மான்' என்கின்றனர்.

கூட்டணியின் தீவிரவாதிகள், 'ஐயோ, இது மாயமான்!' என்கின்றனர்.

கூட்டணியினரோ, 'இது நாங்கள் பிடித்துவந்த மான அல்ல, தானாக வந்திருக்கிறது— எங்களுடைய 'தமிழ்ஈழமான்' வரும்வரை இதனோடு சற்று விளையாடி மகிழ்வதில் தவறில்லை' என்கின்றனர்.

இந்த மாவட்ட அபிவிருத்திச்சபை, கூட்டணிக்குப் பெரிய சோதனையை ஏற்படுத்திவிடுமோ என்று பயப்படவேண்டியிருக்கிறது.

'நாங்கள் கேட்பது தமிழ் ஈழமே. மாவட்டசபை அவர்களாகத் தந்தது. இந்தச் சபையினால் எமக்குக் கிடைக்கக்கூடிய சகாயங்களைப் பெற்றுக்கொள்வதில் தவறில்லை' என்கிறது கூட்டணி.

நல்லது பெற்றுக்கொள்வோம்....அதுபோதுமா?

''அப்படியல்ல எமது தமிழ் ஈழ லட்சியத்தை இந்தச் சபைகள் எவ்விதத்திலும் பாதிக்காது' என்கிறது கூட்டணி.

அப்படியானால் சரி.

'தமிழ்ஈழ லட்சியம் பாதிக்கப்படாமல் அப்படியே ''இருந்து'' விடக்கூடுமே? என்பது தான் தீவிரவாதிகளின் பயம்.'

இந்தத் தீவிரவாதிகளிலே பெரிய பா. உ. தலைவர்கள் யாருமே இல்லை என்பது உண்மைதான்.

ஆனாலும்,

இயக்கத்துக்காக எவ்வித சுயநலமுமின்றி பல ஆண்டுகளாக உழைத்த பல தொண்டர்கள் இருக்கிறார்கள்.

'சுதந்திரன்' பத்திரிகை இருக்கிறது.

இந்தத் தீவிரவாதக்குழுவின் பேச்சுகளுக்கும் எழுத்துகளுக்கும் பதிலுக்குப் பதிலடி கொடுத்து அடக்கி வைத்துவிடவேண்டுமென்று கூட்டணி கங்கணம்கட்டிக்கொண்டு நிற்கிறது.

சுதந்திரனை அடிக்க ஒரு 'உதயசூரியன்' எழுந்திருக்கிறது.

தமிழர் இயக்கங்களுக்கு நல்ல சில பத்திரிகைகள் அவசியந்தான்.

ஆனால், அவைகள் எதிரியை அடிப்பதற்குப் பதில், தங்களுக்குள்ளேயே அடிபட்டுக்கொண்டிருப்பது மிகக் கேவலமான நிலை!


கூட்டணித் தலைவர்கள் பெரியவர்கள்—பெருந்தன்மையானவர்கள்.

சின்னஞ்சிறு எரிச்சல் உணர்ச்சிகளுக்கு அவர்கள் பெரிய இடமளித்துவிடக்கூடாது.

அவர்கள் சற்றே ஆறுதலாக தம்முன்னால் விரிந்துகிடக்கும் பெரிய எதிர்காலப் பாதையை பார்க்கவேண்டும்.

'அடிக்கு அடி. உதைக்கு உதை' என்ற கொள்கையை உள்ளுக்குள்ளேயே வளர்ப்பது நல்லதல்ல.

# கோட்டுக்கு வந்த கோழி!




பால்போல வெள்ளை - பஞ்சுபோல் மென்மை. பா..... பா..... என்றால் பதுங்கும். பிடித்து அணைத்து கொஞ்சி விளையாடுவேன்......

அப்படியிருக்க சட்டத்தரணி கேட்ட கேள்வி.....! ''கோழியோடு யாரும் விளையாடுவார்களா.....?'' அவர் சிரித்தார்: எனக்குச் சினந்தான் வந்தது. படித்தவர்களாம். எதுக்குப் படித்தவர்கள்? சாட்சியை உருட்டி மிரட்டி, உண்மையைப் பொய்யாக்கி வழக்கை வென்று பணம் சம்பாதிக்கத் தானே சட்டம் படித்தார்கள்.

சிறுவன் என்றபடியால், நான் சொல்லுவதை நம்பத்தக்க சாட்சியாக ஏற்றுக்கொள்ளும் வகையில் மிகக்கவனமாக என் பதில்களைக் கேட்டுக்கொண்டிருந்தார் நீதிபதி. ஒரு தடவை எதிரியின் சட்டத்தரணி என்னை வெருட்டி ஏதோ கேட்டபோது, நான் திடுக்கிட்டு, பதில் சொல்லத் தயங்கியபோது, நீதிபதி 'பயப்படாதே நீயும் படித்துப் பெரியவனாகி இப்படி ஒரு சட்டத்தரணியாக வரக்கூடும், பயப்படாமல் பதில்சொல்லு'' என்றார். எனக்கு உற்சாகம் பிறந்தது.

உண்மை வெல்லும் என்ற நம்பிக்கை எனக்கு இருந்தது. எங்கள் வீட்டுக் கூட்டுக்குள்ளிருந்த கோழியை, இரவில் வந்து பிடித்துக்கொண்டுபோய் தங்கள் கூட்டுக்குள் விட்டு, வெளியில் விடாமல், தீன் போட்டு வளர்த்து வந்த எதிரிகள் தாம் குற்றவாளிகளல்ல வென்று, பணம் செலவழித்து ஆளுக்கொரு சட்டத் தரணியையும் ஒழுங்கு செய்துகொண்டது எதற்காக? கள்ளம் வெளியாகிவிட்டபோது, மரியாதை கெட்டுப்போகாமல் பார்த்துக் கொள்ளத்தானே அத்தனை பாடுபட்டார்கள். நாங்கள் ஒரு சட்டத்தரணியை ஏற்படுத்தவேண்டிய அவசியமே இருக்கவில்லை, கோழியையும் இழந்து, பணமும் செலவு செய்யவேண்டுமா என்று நினைத்தோம். தற்செயலாக எதிரிகள் குற்றவாளிகளல்ல என்று தீர்ப்பு வந்துவிட்டால் என்ன செய்வது? யோசித்துப் பார்த்தோம். ஒரு சட்டத் தரணி தேவைதான் என்று பட்டதால் ஏற்பாடு செய்தோம். அவர் நல்ல மனிதர். வழக்கு வெற்றி என்று முதலிலே சொல்லிவிட்டார்.

அவர் சொன்ன வெற்றியில் எனக்கு நம்பிக்கை இருந்தது. நான் பிடித்து விளையாடிய கோழி, அவர்களுடைய கூட்டிற்குள்ளிருந்து, பொலிஸ் உதவியோடு பிடித்தாயிற்று, உண்மை வெல்லுமா? உருட்டுப் பிரட்டு வெல்லுமா? அப்படியென்றால் நீதி என்னவது? நீதிபதியின் படிப்பு— நிதானம் — அனுபவம்— என்னவது?

எதிர்பார்த்தபடியே வழக்கு எங்கள் பக்கம் வெற்றி. கோழியை வழக்காளிக்கே கொடுக்கவும். செலவு தொகையாக நூறு ரூபா வழங்கவும் தீர்ப்பாயிற்று.

விசாரணையின் தொடக்கத்திலேயே நீதிபதி எதிரிகளைப் பார்த்துச் சொன்னார், 'குற்றவாளியாகக் கண்டால் நீங்கள் தப்ப முடியாது. மூன்றுமாதம் மறியலுக்கு அனுப்ப வேண்டி வரும்' என்று, 'உண்மையைச் சொல்லி சமாதானமாய்ப் போங்கள்; நேரமும் மிஞ்சும்' என்று நீதிபதி சொல்லுவது போலப்பட்டது எனக்கு. சே! அவர்கள் அசையவில்லை. சந்தையில் வாங்கிய கோழி என்றும், தன் கட்சிக்காரர் படித்தவர்கள், மதிப்பான குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் என்றும் இரு கட்சிக்குமிடையேபழைய கோபம் இருக்கிறது, அதனால் இந்த வழக்கை சோடித்துள்ளனர் என்றும் சொன்ன சட்டத்தரணி, தீர்ப்புக் கூறப்படும் போது தன் கட்சிக்காரருக்காக மன்றாடினார். படித்த இளைஞர்கள் என்றும் அவர்களின் எதிர்காலத்தை மனதில் கொண்டு கருணை காட்டுங்கள் என்றும் நீதிபதியை வேண்டிக் கொண்டார். எனக்குத் தெரியும். முதலிலே சொன்னேன்...... என்றார் நீதிபதி.

பயந்துபோனார்கள்.

ஆனால் நீதிபதி கருணையுள்ளம் படைத்தவர். குற்றம் என்ற வார்த்தையை வேறு விதமாகப் பாவித்து, செலவு தொகை நூறு ரூபா கொடுக்க உத்தரவிட்டார். நான் அதிர்ச்சியடைந்தேன்.

நாங்களும் அதையே விரும்பினோம். அயலவர்களை மறியலுக்கு அனுப்பினால் மேலும் பாதகமான விளைவுகளை எதிர் நோக்கவேண்டிவரும். சரியோ பிழையோ, நீதியோ, அநீதியோ என்று எதையும் சிந்திக்கமாட்டார்கள்.

ஒரே பிடிவாதமாக சந்தையிலே வாங்கிய கோழி என்றார்களே! அதை நினைக்கத்தான் எனக்கு ஆத்திரம் ஆத்திரமாக வருகிறது. இப்படியும் மனிதர்களா? படித்தவர்களாம். ஒரு பாமரன் இப்படிச் செய்தால் பரவாயில்லை. இல்லை..... அவன் செய்யவே மாட்டான்.

கோழிக்கு என்ன சூட்டுக் குறியிருக்கிறதா? இப்படி எத்தனை வெள்ளைக் கோழிகள்?

எப்படியும் வெல்லப் போகிறோம் என்றுதான் அவர்கள் அவ்வளவு தூரம் வாதாடினார்கள். அந்தச் சட்டத்தரணிக்கு ஒரு அசட்டுத் துணிவு. ''இப்படி எத்தனை வழக்கை வென்றுவிட்டேன். கொலை வழக்கிலேயே வெல்லவில்லையா? இது ஒரு வழக்கா.....?'' என்று.

எதிரி ஒருவரின் வீட்டுச் சிறுவன் என்னோடு விளையாட வருவான். சி. ஐ. டி. போல நான் அவனோடு கதைத்து அறிந்துகொண்டதை அண்ணை ஒவ்வொரு நாளும் கோழி கொண்டு வருவார். கூட்டில் விடுவார். நாற்பது கோழி வரை நிற்குது. இதை நீதிபதிக்கு நான் சொன்னபோது தான், அவர் இந்தக் களவு உண்மைதான் என்று உணர்ந்தார் போலும்.

''வெட்கத்திற்குரிய செயல், சமுதாயத்தில் இத்தகைய குற்றம் புரிந்தவர்கள் வெறுக்கப்படுவார்கள். விநோதப் பிறவிகளாகவே உங்களை மற்றவர்கள் நோக்குவார்கள். இனிமேல் நீங்கள் இந்த நீதிமன்றத்திற்கு வந்தால் ஆகக்கூடிய தண்டனை வழங்கத் தயங்கமாட்டேன்'' என்று எதிரிகளைப் பார்த்து எச்சரித்தார் நீதிபதி. சுற்றவாளிகள் என வாதாடிய குற்றவாளிகளைப் பற்றி எத்தகைய கருத்தைக் கொண்டிருந்தார் நீதிபதி என்றெண்ணி ஆச்சரியமடைந்தேன்.

ஒரு படிப்பினை. ஒரு நல்ல மாற்றம்,

இருட்டிய பின்னும், தெருவிலும், பஸ் தரிப்புகளிலும் காணப்பட்ட எதிரிகள் இப்போது பகலில்கூடத் தேவையின்றித் தெருவிலே காணப்படுவதில்லை. சமுதாயத்தில் இப்படியொரு நல்ல மாற்றத்தை ஏற்படுத்திய கோழியை வாழ்த்தவேண்டும்.

''ஒரு கோழிக்காக வழக்காட, கோட்டுக்குப் போனீர்களா?நீங்களும் மனிதர்களா?'' என்று எங்களைப் பார்த்துக் கேட்கின்றார்கள். எதிரி பக்கத்தார். குற்றத்தை ஒப்புக்கொண்டு, கோழியைக் கொடுத்துவிட்டுப் போங்கோ என்று ஆரம்பத்திலேயே கேட்டோமே! அவர்கள் ஏன் சம்மதிக்கவில்லை? மனச்சாட்சியற்ற, அயலவரிடமே தம் கெட்டித்தனத்தைக் . காட்ட முயலும் 'படித்த'வர்களை என்னென்பது?

எதிரிகளுக்காக வாதாடினரே, அந்தச் சட்டத்தரணியும் படித்தவர்தான். அதுமாத்திரமா? தங்கமான மனிதர். அவர் எங்களுக்கும் வேண்டியவர்.

வழக்கு முடிந்து பலநாட்களுக்குப் பிறகு பிற விசயமாக அவரைச் சந்தித்தார் அப்பா. அவரோடு நானும் போயிருந்தேன். ''எங்களைத் தெரிந்திருந்தும், கோழி எங்களுடையதென்று அறிந்தும், ஏன் எதிரிக்காக ...... பொய்மைக்காக...... பேசினீர்கள்?'' என்று கேட்டார் அப்பா.

அவர் சொன்னார்......

''ஒரு சட்டத்தரணிக்கு அவனுடைய கட்சிக்காரர்தான் முக்கியம். நான்கூட தொடக்கத்திலே நீ[illegible], நியாயம் பார்த்துக்கொண்டிருந்தவன் தான்...... சமூகநியாயம் என்பதற்கும் சட்டப்படி நியாயம் என்பதற்கும் நிறைய வித்தியாசம் இருக்கிறது என்பதை பின்னால்தான் தெரிந்துகொண்டேன்.......... ஒரு சட்டத்தரணிக்கு மனச்சாட்சி என்பது ஒத்துவராத விடயம்...... அது இருக்கக்கூடாது.......... அவனுக்கு வழக்கு முக்கியம்...... தன் கட்சிக்காக அவன் வாதாடியாகவேண்டும்.......... உண்மை பொய் என்பதெல்லாம்.........''

''அதற்கு அப்பாற்பட்ட விடயம் என்கிறீர்கள் சரி......... நான் வருகிறேன்.''

''கோபப்படவேண்டாம் ... இருங்கோ...... வந்து.....''

''எனக்கு உங்கள்மீது கோபமில்லை...... சட்டத்தொழிலை மேற்கொண்ட ஒருவர் சமூக நியாயத்தைப் பார்க்க முடியாதுதான்.....''

அவர் முகத்தை முறிக்கக் கூடாதென்பதற்காக அப்பா சமாளித்துக்கொண்டு வந்துவிட்டார்.

ஆனால் நான் யோசிக்கிறேன். அறப்பணிக்கும் அருள்பணிக்கும் அள்ளிக் கொடுக்கும் வள்ளலாக, அன்பூவான மனிதராக வாழும் இந்த நல்லவர் இந்தத் தொழிலை ஏன்தான் தேர்ந்தெடுத்தாரோ? என்று.

[யாவும் கற்பனை]

'கண்ணன்' – தென்மட்டுவில்

## உருவகச் சித்திரம்

## ஆவலொன்று அடங்குகின்றது ....

சின்னச் சின்னப் பஞ்சுப் பொதிகளாக வெண் முகிற் கூட்டங்களை ஊதித் தள்ளிவிட்டு அலட்சியமாக ஒரு மலை முகட்டுடன் மோதிக் கொள்கிறது சண்டமாருதம்! சென்ற இரவு மந்த மாருதமாக, மலய மாருதமாக முகிற்றுவியல்களை அள்ளியணைத்துத் தாலாட்டிய அதே தென்றல் தானா இது! உம்......ம்...... அதோ திரண்டு கொண்டு வருகின்றதே ஒரு பெரிய கார் முகிற்கூட்டம்...... ஓ...... அது இந்தக் காற்றைக் கொஞ்சம் எதிர்த்து நிற்குமேயானால்...... இந்த வானம் பார்த்த பூமியின் முகம் மலர்ந்து விடும்.

''காற்றே! உனக்குக் கோடி புண்ணியம் கிடைக்கும். இதோ என் தளிர்களைப்பார். வாடி வதங்கி உயிர் இழந்து கொண்டிருக்கின்ற பரிதாபத்தைப் பார்! உனக்கு இரக்கம் வரவில்லையா? கொஞ்ச நேரம் அமைதியாக இரேன்! அந்தக் கார்மேகம் பொழிந்து விட்ட பின்பு அதைத் தீண்டு! அது வரை தொடாதே!'' பூமாதேவி கண்ணீர் மல்க வாயுதேவனிடம் கெஞ்சுகிறாள். ''போடி பைத்தியக்காரி! திரள்கின்ற மேகமெல்லாம் பொழிந்து விடுமா என்ன? [illegible] காற்றுக் சேலியுடன் சலசலத்துக் கொள்கிறது.

''இல்லை! நீதான் ஏமாற்றுக்காரன்! என்னைத் தழுவத் துடிக்கும் அந்த நன்னீர் முத்துக்களைப் பலாத்காரமாகப் பறித்து விரட்டிக் கொண்டு போய் கண்காணாத தொலைவில் கடல் மடியிலே கொட்டி விடுவாய்! உனக்குச் கடல்க் கன்னி மேல் தான் மோகம்!'' பூமாதேவி ஆவேசத்துடன்கூறுகிறாள். காற்று நிதானமாக மெல்லச் சிரித்துக் கொள்கிறது. ''பூமா! நீ தப்புக்கணக்குப் போட்டு விட்டாய். நீ நினைப்பதுபோல நான் ஒர வஞ்சனை செய்யவில்லை. உனக்கு வேண்டியது நன்னீர் தானே! ம்...... பொறுத்திரு! இன்று நிலவு வரும்போது உன் ஆசையை நிறைவு செய்கிறேன்! போதுமா''? சமாதானம் அடைந்த பூமா காற்றுக்கு நன்றி கூறிவிட்டுத் தன் தளிர்களுக்கும் ஆறுதல் கூறுகின்றாள். இன்னும் சில மணி நேரங்கள் தானே......

மாலைச் சூரியனின் செங்கல் மங்கல் கதிர்கள் பட்டுப் பூமகள் கன்னம் சிவக்கத் தலைமை குனிந்துகொள்கிறாள். மெல்ல இருள் பரவ, முற்றுப்பெறாத நிலவுமகள் தன் எழில் அனைத்தையும் மறைகின்ற மாலைச் சூரியனுக்கு வாரிக் கொடுத்துவிட்டு வேகமாகச் சிரிக்கிறாள். இன்னும் ஓரிரு தினங்களில் பூரண நிலவாகப் பவனிவரப்போகும் பூரிப்பு ஒருசிறிதுமின்றி விரக்தியுடன் இதழ்களை அழுந்த மூடிக்கொள்கிறாள். அதோ...... அந்தக் கார்மேகம் ஏன் இத்தனை பெரியதாகக் கறுத்து, இருண்டு...... ஆ...... என்னை மூடிக்கொள்கிறதே. நிலவுமகளின் ஒளி மறைந்துவிடப் பூவுலகெங்கும் காரிருள் மூடிக் கொள்கிறது. ம்.... காற்றுக் கனமாகப் பரபரக்கிறது.

''பூமா! ம்...... நீ தயாரா? அதோ அந்த மேகத்தை நான் தீண்டமாட்டேன் ஆமா! அது பொழியப்போகிறது. உனக்கு வேண்டிய மட்டும் நீ நந்நீரைத் தேக்கிக்கொள். நான் வருகிறேன்.'' காற்று மெல்ல விலகிப்போகச் சடசடவென்று கோடை இடி முழக்கத்துடன் மின்னல் கீற்றுத் தீப ஒளியில் வருணபகவான் பூமாதேவியின் பரந்த மார்பிலே தஞ்சம் அடைகின்றான்.

''ஓ! என்ன பேய்மழை? இது என்ன பெருவெள்ளம்?'' பூமா அதிர்ச்சியுடன் தன்

(9-ம் பக்கம் பார்க்க)

—மா. வ பாரதி—

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 15ம் நூற்றுண்டில் தமிழ் மன்னர் இராசதானியாக விளங்கிய

# நல்லூர் கோட்டையும் அதன் அமைப்பு முறையும்

''இலங்கைத் தமிழர் வரலாறு பற்றி இன்னமும் பல ஆய்வுகள் நிகழ்த்தப் படவேண்டிய தேவை உள்ளது. வரலாறே தெளிவின்றி இருக்கும் இந்நிலையில், தமிழ்மன்னர்களின் நகரங்களைப் பற்றியோ, கோட்டைகளின் அமைப்புகளைப் பற்றியோ இதுவரையில் யாருமே ஆய்வு நடத்திடவில்லை.

இந்நிலையில் நான் தமிழ் மன்னர்களின் இராசதானியாகப் பதினைந்தாம் நூற்றுண்டில் புகழ்பெற்று விளங்கிய நல்லூர் நகரைப் பற்றி ஆராயத் தொடங்கினேன். அதன் விளைவு, நல்லூர்க் கோட்டையைப் பற்றியும், அதன் அமைப்பைப்பற்றியதுமான இக்கட்டுரை,

இக்கட்டுரையின் நோக்கம், இன்னும் பலரை, இந்நகர் பற்றி ஆராயத் தூண்டுவதேயாகும். நல்லூர்க் கோட்டையின் அமைப்பு மட்டுமின்றி, அதனைச் சுற்றிய நகர அமைப்புப் பற்றியும் மேலும் பலர் ஆராய வேண்டுமென்பதே எனது வேண்டுகோள்.

இங்கு நான் நல்லூர்க் கோட்டையெனக் குறிப்பிடுவது தமிழ் மன்னர்கள் நல்லூரில் கட்டியிருந்த கோட்டையேயாகும்.''

தற்போது ஈழத்தின் புகழ் பெற்ற முருக ஸ்தலமாக விளங்கும் நல்லூர், 15ம் நூற்றுண்டில் யாழ்ப்பாண மன்னர்களின் இராசதானியாக, இராச வீதிகளையும், அரண்மனைகள், குதிரைப்படை, யானைப்படை, கொட்டாரங்களையும், சிங்காரவனம், நெசவாளர் இருக்கைகள், பொற்கொல்லர், ஓவியர், இரத்தின வணிகர், புலவர், பாணர், அந்தணர், மருத்துவர். சோதிடர்இருக்கைகளுடன் கூடி விளங்கியது.

பதினைந்தாம் நூற்றுண்டின் நடுப்பகுதி வரை, யாழ்ப்பாண அரசின் தலைநகராகச் சிங்கை நகர் விளங்கிவந்ததாக அறியப்படுகின்றது. கி. பி. 1450ம் ஆண்டளவில் சபுமல்குமாரனின் (செண்பகப்பெருமாள்) படையெடுப்பால் இந்நகர் அழிந்திடவே, அவன் நல்லூரை இராசதானியாக்கினன். நல்லூரும், சிங்கை நகருமொன்றேயெனச் சில சரித்திர அறிஞர்கள் கருதுகின்றனர். ஆனல் சுவாமி ஞானப்பிரகாசர், சிங்கைநகர் நல்லூர் அல்லவென்றும், வல்லிபுரமாக இருக்கலாமென்றும் கருதுகின்றார்.

இச்சமயம் நாம் 14ம் நூற்றுண்டில் இலங்கைக்கு வந்த புகழ்மிக்க யாத்திரீகன் 'இபின் படூடா'வின் குறிப்புகளை நோக்குவது பயனுடையதாகயிருக்கும். சிவனொளிபாதமலை செல்வதற்காக வந்த 'இபின் படூடா', அவ்வேளை யாழ்ப்பாண மன்னனைப் பற்றிக் குறிப்பிடுகையில் 'இலங்கையின் சுல்தானெ'ன்கிறார். மேலும் அவனது கீர்த்திமிக்க கடற்படையைப் பற்றியும் குறிப்பிடுகின்றார்.

'சபுமல்குமாரய'விஞல் கந்தசுவாமி ஆலயம் கட்டப்பட்டு, (இவ்வாலயம் தற்போது முத்திரைச் சந்தைக்கண்மையிலுள்ள சேர்ச் இருக்குமிடத்தில் இருந்தது.) இராசதானியாக்கப்பட்ட நல்லூர், அவனுக்குப் பின் மீண்டும் ஆட்சியைக் கைப்பற்றிக் கனக சிங்கையாரியன், பரராசசேகரன் காலத்தில், நாலு திசைகளிலும் கோயில்களெடுக்கப்பட்டு, கீர்த்திமிக்கதாக விளங்கியது.

இவற்றை நோக்கும்போது நல்லூர்க் கோட்டையானது, சுற்றுமதிலுடன் கூடியதாகவும், அதன்கண்ணே வடக்கு, தெற்கு, கிழக்கு, மேற்கு வாசல்களைக் கொண்டதாக

வ. ந. கிரிதரன்

(கட்டிடக்கலை மாணவர்—
மொரட்டுவ பல்கலைக் கழகம்)

இத்தகைய ஒரு மன்னனின் தலைநகரான சிங்கைநகரைப் பற்றிக் கேகாலையில் கொட்டகமாவிலிருந்தெடுக்கப்பட்ட கல்வெட்டொன்று இவ்விதமாகக் கூறுகின்றது. 'பொங்கொலிநீர்ச் சிங்கைநகர் ஆரியர்' என்பதே அது. இக்கல்வெட்டின்படி சிங்கைநகரானது, பொங்கும் அலைகள் சப்திக்கும் கடலின் சமீபமாகயிருந்ததென்பது தெளிவாகின்றது.

இவற்றையெல்லாம் நோக்கும்போது, ஆதியில் கூறப்படும் சிங்கைநகரென்பது வல்லிபுரமாக இருக்கலாமென்றே படுகின்றது. இதற்குச் சான்றாகக் காற்றுக்காலங்களில் வல்லிபுர மணற்கும்பிகளுள் அகப்படும் பழம் பொருட்களும், கரையோரமாகப் போன பெருவீதியின் அடையாளங்களும், பெருங்கடற் சமீபம், சிறந்த துறைமுகப்பொலிவு என்பன இருக்கின்றன.


இச்சர்ச்சையை இத்தோடு விட்டுவிட்டு, நல்லூர்க் கோட்டை அமைப்பைப் பற்றிப் பார்ப்போம். யாழ்ப்பாண வைபவமாலை போன்ற பழைய நூல்களையும், போர்த்துக்கேயர் குறிப்புகளையும், சரித்திர அறிஞர்களின் நூல்களையும் பார்க்கும்போது நல்லூர்க் கோட்டை அமைப்பானது ஒருவித ஒழுங்கில் இருந்திருப்பதை அவதானிக்கக் கூடியதாகயிருக்கும்.

வும், இவ்வாசல்களிற்கண்மையில் முறையே சட்டநாதர் கோவில், கைலாசநாதர் கோவில், வெயிலுகந்தபிள்ளையார்கோவில், வீரமாகாளியம்மன்கோவில் முதலான ஆலயங்களைக் கொண்டதாகவும் விளங்கியிருக்கவேண்டும்,

யாழ்ப்பாண வைபவமாலை முதலான நூல்களிலிருந்தும், போர்த்துக்கேயரின் நூல்கள் வாயிலாகவும், வீரமாகாளியம்மன் கோவிலிற்கண்மையில் மேற்கு வாசலும், சட்டநாதர் கோவிலிற்கண்மை வடக்கு வாசலும் இருந்ததை அறியக்கூடியதாக உள்ளது. எனவே கைலாசநாதர் கோவிலிற்கண்மையில் தெற்குவாசலும், வெய்யிலுகந்தபிள்ளையார் கோயிலிற்கண்மையில் கிழக்கு வாசலும் இருந்திருக்க வேண்டும்.

இவற்றையெல்லாம் நோக்கும்போது நல்லூர்க் கோட்டையானது வடதென், கிழக்கு மேற்கு வாசல்களை இணைக்கும் பிரதான வீதிகளைக் கொண்டுள்ளதாக இருந்திருக்கவேண்டும். அப்படியென்றுல் நல்லூர்க் கோட்டையின் வடக்குதெற்கு வாயிலை இணைக்கும் வீதி எதுவாக இருக்கும்? அவ்வீதி தற்போதுள்ள சங்கிலித்தோப்புக்கு அண்மையில் செல்லும் யாழ்ப்பாணம்-பருத்தித்துறை வீதியேயாகும். அவ்வீதியானது தற்போதுள்ளதுபோல் திரும்பாமல் நேராகச்சென்றிருக்கவேண்டும். நேராகவே இவ்வீதி செல்லுமாயின் கச்சேரி நல்லூர் வீதியுடன் பொருந்துவதைக்காணலாம். இதுபோல் நல்லூர்க் கோட்டையின் கிழக்கு மேற்கு வாயில்களை இணைக்கும் வீதியானது, தற்போதைய நல்லூர் ஆலயத்திற்கருகில் செல்லும் வீதியாக இருந்திருக்க வேண்டும். இவ்வீதியானது தற்போது முத்திரைச்சந்தையை நோக்கி வளைவதைப் போல் வளையாமல் நேராகச் செல்லுமாயின் வெயிலுகந்த பிள்ளையார் ஆலயத்திற்கண்மையில் செல்லும் வீதியுடன் பொருந்துவதைக் காணலாம்.

நான் சட்டநாதர், வெயிலுகந்தபிள்ளையார் ஆலயங்களுக்கருகாகச்செல்லும் வீதிகளையே நல்லூர்க்கோட்டையின் பிரதான வீதிகளாக எடுத்ததற்குக் காரணம், இவ்விரு ஆலயங்கள் மட்டுமே போர்த்துக்[illegible] இருந்த இடத்திலேயே மீண்டும் கட்டப்பட்டன என முடிவு செய்ததனலாகும், தற்போதைய கைலாசநாதர், வீரமாகாளியம்மன் ஆலயங்கள் பழைய இடங்களில் கட்டப்படவில்லை என்பதை விளக்குவேன்,



சங்கிலித்தோப்பின் வாயில் சிதைவுற்ற நிலையில் காணப்படுகிறது.

தற்போதைய நல்லூர் ஆலயம் 1734ம் ஆண்டளவிலேயே புனருத்தாரணம் செய்யப்பட்டாலும், மணிக்கூட்டுக் கோபுரம், சுற்றுப்பிரகாரமண்டபங்களென்பவை பின்னரே கட்டப்பட்டன. இப்புதிய ஆலயத்தின் பின்னரே வீரமாகாளியம்மன், கைலாசநாதர் ஆலயங்கள்கட்டப்பட்டன. ஆனல் சட்டநாதர் ஆலயமோ புதிய நல்லூர் ஆலயம் கட்டப்பட முன்பே கட்டப்பட்டது. இதனை இதன் கட்டடத்தோற்றத்திலிருந்தும் அறியலாம். யாழ்ப்பாண வைபவமாலை இதனை உறுதிப்படுத்துகின்றது

இனிப்பழையபடி நல்லூர்க் கோட்டைக்கே செல்வோம் வாருங்கள். நல்லூர்க்கோட்டையின் கிழக்கு மேற்கு, வடக்கு தெற்கு வீதிகள் சந்திக்கும் [தற்போதைய யாழ்ப்பாண......பருத்தித்துறை வீதி முத்திரைச்சந்தையில் திரும்புமிடம்] இடத்திலிருந்துசட்டநாதர், வெயிலுகந்தபிள்ளையார் ஆலயங்கள் ஏறத்தாழச் சமமான தூரத்திலிருப்பதை அறியலாம். இதுபோல் வீரமாகாளியம்மன், கைலாசநாதர் ஆலயங்களும் ஏறத்தாழச் சமமான தூரத்தில் இருந்திருக்கவேண்டும்.

அதாவது வீரமாகாளியம்மன் கோவில் உண்மையில் போர்த்துக்கீசரின் படையெடுப்பால் அழிவதற்கு முன்னர் தற்போதைய நல்லூர் ஆலயத்திற்கண்மையிலெங்கோயிருந்திருக்கவேண்டும். கைலாசநாதர் கோவிலும் தற்போதைய நாவலர் ரோட்டும், கச்சேரி—நல்லூர் ரோட்டும் சந்திக்கும் இடத்திற்கண்மையிலெங்கோயிருந்திருக்க வேண்டும்.

இவ்வாறு ஆலயங்கள் ஒரு ஒழுங்கில் கட்டப்பட்டிருக்க வேண்டுமாதலால்தான், புதிய நல்லூர் ஆலயம் கட்டப்பட்ட பின்னர் கட்டப்பட்ட வீரமாகாளியம்மன், கைலாசநாதர் ஆலயங்கள் இரண்டும் ஆலய

வீதியும், பருத்தித்துறை...யாழ்ப்பாண வீதியிரண்டும் சந்திக்கும் இடத்திலிருந்து ஏறத்தாழ சமமான தூரத்தில் கட்டப்பட்டுள்ளன. அதுமட்டுமின்றி இந்தத்தூரங்களானது ஏறத்தாழ, நல்லூர்க்கோட்டையின் கிழக்குமேற்கு, வடதெற்கு வீதிகளின் சந்தியிலிருந்து சட்டநாதர், வெயிலு கந்தபிள்ளையார் ஆலயங்களின் தூரங்களுக்குச் சமமாகயிருப்பதைக் காணலாம். இவற்றிலிருந்து நாம் வரக்கூடியமுடிவு இதுதான். நல்லூர்க் கோட்டையானது கோட்டையின் மையத்திலிருந்து நான்குதிசைகளிலும் சமமான தூரங்களில் நான்கு வாசல்களிற்கும் வெளிப்புறமாக மேற்கூறிய நான்கு ஆலயங்களைக் கொண்டதாகவும் விளங்கியிருக்கவேண்டும். பின்னர் போர்த்துக்கேயர் ஆலயங்களை இடித்துவிடவே, முதலில் கட்டப்பட்ட சட்டநாதர் ஆலயம் பழைய இடத்திலும், புதிய நல்லூர் ஆலயம் கட்டப்பட்டபின் கட்டப்பட்ட வீரமாகாளியம்மன், கைலாசநாதர் ஆலயங்களை புதிய ஆலயத்தை மையமாக வைத்து புதிய இடங்களில் கட்டப்பட்டிருக்கவேண்டுமென்பதேயாகும்,


இவற்றையெல்லாம் பார்க்கும்போது நல்லூர்க்கோட்டையானது நான்கு வாசல்களையும் அவ்வாசல்களை இணைக்கும் பிரதான வீதிகளையும், அவ்வீதிகளின் சந்திப்பிலிருந்து கோட்டைவாசல்கள் ஏறத்தாழச் சமதூரத்திலும், ஒவ்வொரு வாசலிற்கும் வெளிப்புறமாகவும் வாயிற்காப்பாகவும் சட்டநாதர், வெயிலுகந்தபிள்ளையார், வீரமாகாளியம்மன், கைலாசநாதர் ஆலயங்களையும் கொண்டதாக விளங்கியிருக்கவேண்டுமென்று படுகின்றது.

### மாலைநேரச் சந்தை

இப்பொழுது தற்போதைய நல்லூர் வரைபடத்தைப் பார்ப்போமாயின் பலவிஷயங்களை அவதானிக்கக்கூடியதாயிருக்கும். அவ்விஷயங்கள் ஆச்சரியமூட்டுவனவாகவுமிருக்கும் அதாவது மேலே நான் கூறியிருப்பதுபோல் நல்லூர்க் கோட்டையின்வடக்கு-தெற்கு கிழக்கு-மேற்கு வாசல்களை இணைக்கும் வீதிகளானது நான்கு பகுதிகளாக பிரித்துவிட்டிருப்பதை அறியலாம்.

இந்நான்கு பகுதிகளுள் வட-கிழக்குப் பகுதி சங்கிலித் தோப்பு, பழைய நல்லூர் ஆலயம் (தற்போது சேர்ச்

(7-ம் பக்கம் பார்க்க)



செடிகொடிகளால் சூழப்பெற்று, சி[illegible] நல்லூரில் காணப்படும் யாழ்ப்பாண[illegible] அரசன் சங்கிலி மன்னனின் கோட்டை இது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உங்கள் கவிதைகள்

கவிதை இயற்றுங்கள் என்று கேட்டிருந்தோம். உங்களிற் பலர் உற்சாகத்துடன் கவிதைகள் எழுதி அனுப்பியிருந்தீர்கள். சிலவற்றை இங்கு தருகின்றோம்.

### விந்தை நிலா!

ஓடும் முகில் நடுவே வண்ண நிலாவே—நீ
ஓசையின்றி நடப்பதென்ன விந்தை நிலாவே!
வீசுகின்ற தென்றலிலும் வண்ண நிலாவே—நீ
விரைந்து குளிர்வதென்ன விந்தை நிலாவே!
மாமலை மீது வண்ண நிலாவே—நீ
மகிழ்ந்து ஆடுவதென்ன விந்தை நிலாவே!
மாரி முகில் நடுவே வண்ண நிலாவே—நீ
மடமங்கையென மறைவதென்ன விந்தை நிலாவே!
மாந்தளிர் மேனியில் வண்ண நிலாவே—நீ
மாக்கோலம் போடுவதென்ன விந்தை நிலாவே!
பூம்பொழில் நடுவே வண்ண நிலாவே—நீ
புத்தொழி பாய்ச்சுவதென்ன விந்தை நிலாவே!

இளவாலை. ஜெனி லூட்ஸ்.

### வெண்மதியே முழுநிலவே!

முத்தழகே வெண்மதியே முழுநிலவே எங்குவந்தாய்
கட்டழகு மேனியவள் காவியத்து நாயகிபோல்
மெட்டழகு ஓசையிட மென் இடையும் தாளமிட
ஏட்டில் வரையாதெழிலோவியத்தைக் கண்டதுண்டா

வண்ணம் அவள் உன்நிறந்தான் வடிவில்
ஒருதேவதைபோல்
எண்ணம் அறிந்து கொண்டா எமக்குத் துணையாகுய்
குளிர்ந்து நீகாய்வதென்ன கோடி சுகம் தருவதென்ன
தளர்ந்து நான் வாடுகிறேன் தயவு கொஞ்சம்
காட்டாயோ

காவல் பலத்ததுவோ காரிகைக்கு நோய்எதுவோ
ஏவல்பிசாசு சில எள்ளி நகையாடியதோ
நாவல்பழ நிறத்து நயனங்கள் தூங்கினவோ
பாவலன் நான் இருக்க பைங்கொடிக்கு நேர்ந்ததென்ன?

நேற்று நீ வந்திருந்தாய் நேரிழையைப் பார்த்திருந்தாய்
இன்றும்நீ வந்துவிட்டாய் என்னவளைக் காணவில்லை
ஊற்றுப் பெருக்காக உள்ளம் அலைபாயுதிங்கே
காற்றாய் பறந்து சென்று காதலிக்குத் தூதுசொல்வாய்

பரந்தன். செவ்வந்தி மகாலிங்கம்.

### மதியை மயக்கும் மதியே!

மண்ணிருளைப் போக்கி நிற்கும் வண்ணமதியே
உன்மேல் மையல் கொள்ளார் யாருமுண்டோ
இப்புவியிலே,
கண்ணால் உன்னை நோக்கும் தோறும் வெண்மை மதியே
என்னைக் சுாந்தமாக ஈர்ப்பதேனோ
சொல்லுநிலவே,
பெண் வதனம் உன்னை ஒக்கும் என்பர் கவிஞர்
நின் பொன்முகத்திற்கீடுடைய பெண்களு
முண்டோ,
தண்மையற்ற சூரியன் மேல் காதல் கொள்ளும் நீ
மின்னும் அவன் வருகைக் கேங்கி
நிற்காததும் ஏனோ?
எண்ணில்லாதோர் சொக்கி நிற்கும் உன்னெழிலிலே
எந்தன் வாழ்வின் இனபம் கண்டேன் ஓடும்
நிலவே,
கண்ணியமில் மாந்தரை நீ காண்பதனாலோ
உன் களங்கமில்லா ஒளிமுகத்தைச் சுருக்கிக்
கொள்கிறாய்,
புண்ணியம் செய் மாந்தருளர் இவ்வுலகிலே, நீ
புண்ணுக்காதே உன்மனதை இதனையெண்ணியே

அளவையூர். சிவ. சிறீஸ்கந்தராசா.

### தவழ்ந்து வரும் நிலவே!

தென்னங்கீற்றில் தென்றல் காற்று புகுந்து விளையாடுது
தேமாவின் கனிகளுடன் கரம் கோத்துப் பாடுது
வெண்முகிலில் தண்ணிலவு தவழ்ந்து உலா வருகுது
நிலவினிலோர் அன்பு முகம் என்மதியை மயக்குது!

அருவி நீரின் சலசலப்பில் வளையோசை கேட்குது
அவள் அமுதூறும் இன்மொழியை குயிலின் குரல் மீட்டுது
மலர்ந்து வரும் மல்லிகையில் மயக்கும் நகை தெரியுது
மனமேடை ஆடலுக்கு இதயம் தாளம் போடுது!

என் நினைவு என்னை விட்டு எங்கோ தூரப் பறக்குது
என்னுயிரோடொன்றி விட எனது மனம் துடிக்குது
கருமுகிலின் அணைப்பினுள் வெண்நிலவு தஞ்சம் அடையுது
இதயவீணை மீட்டலில் இன்ப ராகம் காற்றில் கலந்தது!

யாழ்ப்பாணம். செல்வி கௌரி திருநாவுக்கரசு.

### பவனிவரும் நிலவே!

தோழியராய் தாரகைகள் புடைசூழ
தோகைநீ கொலுவாய் பவனிவரும் காட்சியிலே
நாழிப்பொழுதாய் எனைமறந்தே நிற்பேனடி
நூலிடையே உன்காதலையே எண்ணிமனம் ஏங்குதடி

ஊழிக் கொடுங்காலம் வந்தேயெனை அழித்தாலும்
உந்தன் கோலமுகம் நெஞ்சைவிட்டு அகலாதடி-என்றும்
வாழிநீ வாழியென்றே நிதம் உன்னை
வாழ்த்தியே நான் பாடி இருப்பேனடி!

கொழும்புத்துறை. ராணி மகேசு

# மூவர் எழுதும் குறுநாவல்

# பூ நாகம்!

## இந்த இளம் எழுத்தாளர்

இளம் எழுத்தாளர்களான வடகோவை வரதராஜன், இ. இராஜமகேந்திரன், கோப்பாய் எஸ். சிவம் ஆகிய மூவரும் சேர்ந்துஎழுதும் 'பூநாகம்' குறுநாவல் இன்று ஆரம்பமாகின்றது.

வடகோவை வரதராஜன் ஆரம்பிக்கிறார்.

இவர் கோப்பாய் வடக்கில் பிராம்பற்றையைச் சேர்ந்தவர், ஆக்க இலக்கியத்திலும் விளையாட்டுத் துறையிலும், பறவை விலங்கினங்களிலும் ஆர்வம் அதிகமுடைய இவர் சிறுகதை, கவிதை, விஞ்ஞானக்கட்டுரைகள் போன்ற வற்றை எழுதியுள்ளார், தமிழருவி என்ற கையெழுத்தேட்டை வெளியிட்டுவருகின்றார். க. பொ. த. (உயர்தரம்) பரீட்சை முடிவினை எதிர்பார்த்துக் காத்திருக்கும் மாணவர் இவர்.

## [1]

அந்த மாட்டு மந்தைக் கூட்டம் ரோட்டைத்தாண்டி, இப்பால் வயல் வெளிக்குப் போகும் ஒழுங்கைக்குள் புழுதியைக் கிளப்பிக்கொண்டு இறங்கும்போது இலங்கைஒலி பரப்புக் கூட்டுத்தாபனம் தன் பிற்பகல் சேவையைத் தொடங்கும். மனிதன் நேரத்தை மறந்தாலும் மிருகங்களை மணிக்கூட்டுக் கம்பிகள் தட்டி எழுப்பத் தவறுவதில்லை. அந்த மாட்டுக் கூட்டத்திற்குப் பின்னால் நீண்டதொரு துவரந்தடியுடன் சிங்கன் வந்து கொண்டிருப்பான். துவரம்தடி சும்மா பெயருக்கு கையில் இருக்குமே தவிர அது பயன்படுத்தப்படுவதில்லை. சிங்கன் குரலோசையே அந்த மாட்டு மந்தையை கட்டுப் பாட்டுக்குள் கொண்டு வந்து விடும்.

''ஏய் செங்காரி இஞ்சாலை வா''-மந்தையை விட்டு விலக முயன்ற அந்தச் செங்காரிக் கண்டு இவனின் கழுகுப் பார்வையில் பட்டு; வெளிவந்த உறுமலால் மீண்டும் மந்தைக்குள் நுழைந்து வயலை நோக்கிச் சென்றது. ஒழுங்கையில் உள்ள அந்த நீலப்படலை வீட்டை மாடுகள் கடக்கும் போது அவன் கண்கள் ஒருவித பரபரப்போடு அந்த வீட்டு வளவைத் துளாவின. அவனின் பரபரப்பிற்குக் காரணமான அந்த உருவத்தை அங்கு காணாததால் சிங்கனின் முகத்தில் சுருக்கத்தின் சாயல் தெரிந்தது. ஒரு நடுத்தர வயது மாது மூன்று மாடுகளைக் கொண்டு வந்து இவன் மந்தையுடன் சேர்த்தாள்.

''ஏன் இண்டைக்கு வெள்ளைச்சியைக்காணேல்லை''-வந்த மாடுகளைச் சாய்த்தபடி கேட்டான் சிங்கன்.

''அது இண்டைக்கு ஒரு மாதிரி நிக்குது;கண்டு போடுகிறமாதமெல்லே, அதுதான் கட்டி வைச்சிட்டன்'' -அந்த மாது சொன்னாள்.

'':நீங்கள் பயப்பிடாமல் மாட்டை அவிட்டுவிடுங்கோ மேச்சலுக்கு. அது கண்டு போட இன்னும் ஒரு கிழமைக்குமேலை கிடக்குது.'' -சிங்கனின் குரலைக் கேட்டதும் அந்த வீட்டின் யன்னல் கம்பியில் ஒரு அழகு முகம் பதிந்து ஒழுங்கையை ஆவலுடன் நோக்கியது. சிங்கனின் பரபரத்த விழிகள் அந்த முகத்தைக் கண்டு மகிழ்ச்சியால் விரிந்தன. அந்தக் கம்பியில் சிறைப்பட்ட முகம் உதடுகளைக் கடித்து அழகு காட்டியது.

இதற்கிடையில் சிங்கனின் குரலைக் கேட்ட 'வெள்ளைச்சி' எனப்படும் அந்த வெள்ளைப் பசு 'அம்பே' என்று குரல் கொடுத்தது. ''நில், நில்,இண்டைக்கு உனக்குப் பட்டினி தான்'' என்று உரத்துக் கூறியவாறே யன்னலைப் பார்த்துக் கொண்டு மாடுகளைச் சாய்த்தான்..

அந்த வீட்டுப்படலையைத் தாண்டிச் சிறிது தூரம் சென்றதும் வைரமுத்தம்மான் தனது மாடுகளுடன் நின்று கொண்டிருந்தார். ''என்னம்மான் இண்டைக்கு புதுக் கண்டொண்டு மேச்சலுக்கு வருகுது. அவிட்டனியளோ'' -வைரமுத்தம்மானின் மாடு ஒன்றிற்கு போட்டிருந்த தாவளையைச் சரிட்பண்ணியவாறே சிங்கன் கேட்டான்.

''ஓமடாப்பா உவன் என்ரை மூத்தவன் நாவக்குழியாலை அவிட்டந்தவன். ஏதோ 'ஊசிக்' கண்டாம். நல்லாப் பால் கறக்குமாம்.'' அம்மான் வெற்றிலைச் சரையை அவிழ்த்தார். சிங்கன் அந்தக் கண்டைப் பிடித்து வாயைத் திறந்து பல்லைப் பார்த்தான். பல்லைப் பார்த்து மாட்டின் வயதைச் சொல்வதற்கு சிங்கனுக்கு நிகர் சிங்கன் தான். பல்லைப் பார்க்கும்போது திமிறிய மாட்டிற்கும் பொறிகலங்கத் தக்கதாக கன்னத்தில் ஒரு அறைவைத்தான். சிங்கனின் அறையின் அகோரத்தை தாங்கமாட்டாது கண்ணை மூடி முதுகை நெளித்தது மாடு.

''ஆர் அம்மான் திரவியமே அவிட்டவன்.''

''ஓமடாப்டா ஏன் மாடு சரியில்லையே.''

''ஏனக்கா, இந்த மயிலையிலை இவ்வளவு உண்ணி புடிக்க விட்டியள்.''

''ஓமடா தம்பி; சருகுண்ணி நாயமாகத்தான் புடிச்சிருக்கு. நானும் இரவிலை நெருப்புச் சட்டியைக் கொண்டு வந்து வைச்சிட்டு ஒவ்வொரு உண்ணியாய் புடுங்கித்தான் போடுகிறன். ஆனாலும் குறையிற பாட்டைக் காணவில்லை.'' செல்லக்கா வெற்றிலையைப் ''புளிச்'' என்று துப்புகிறா.
''உதெல்லாம் மினக்கெட்ட வேலை அக்கா; நான் சொல்லுமாப்போலை செய்து பாருங்கோ; பெரிய பொயிலை ஒண்டை வாங்கி; இடிச்சு நூளாக்கி கொதி தண்ணியிலை இரவு முழுக்க ஊறவிடுங்கோ. விடிய அந்தத் தண்ணியை நல்லாக் கலக்கி மாட்டின்ரை இடுக்கிறை எல்லாம்பூசுங்கோ. பேந்து பின்னேரம் மகனைக் கொண்டு உங்கை கோப்பாய் கடலுக்கை கொண்டுபோய் உப்புத் தண்ணிலை இரண்டு வாளி அள்ளிஊத்தச் சொல்லுங்கோ. பிறகும் உண்ணியிருக்கிற கெட்டியை ஒருக்காப் பாப்பம்.''

''சரி நீ சொல்லுமாப்போலை இண்டைக்கு ஒருக்காச் செய்து பாப்பமன்''.

சிங்கன் நாக்கை மடித்து 'டிரி...டிர்'' என்று ஒருவித எழுத்தில் எழுத முடியாத ஒலியை எழுப்பினான். மந்தை நகரத் தொடங்கியது.

அடுத்து பூவரச மத்தியில் கட்டப்பட்டிருந்த சின்னாச்சிக் கிழவியின் பசுமாட்டை அவிழ்த்து கழுத்திலுள்ள கயிற்றை நன்றாகஇழுத்துகாலுடன் தாவளையாகக் கட்டினான். தாவளை போட்ட மாடு கழுத்தை மேலே நிமிர்த்த முடியாது கீழே பார்த்தபடி நடந்தது. தாவளை போட்டால் தான் மாடு பராக்குப் பார்க்காது,நிலத்தைப்பார்த்த படி மேயும் என்பது சிங்கனின் கருத்து.

## வடகோவை வரதராஜன் ஆரம்பிக்கிறார்

''விசரன்; வெறும் விசரன்; இவ்வளவு நாள் பழகின என்னட்டை ஒரு சொல்லுக் கேளாமை போய் ஒரு 'திமிலன்' மாட்டைக் கொண்டந்திருக்கிறான். அம்மான் உங்கடை மோனுக்கு ஆரோ நல்லாய் குடும்பிகட்டிப் போட்டாங்கள். இது ஊசிக் கண்டுமில்லை; பால்ச் சாதியுமில்லை. நல்ல பால்ச்சாதிமாடு எண்டால் முன்பக்கம் ஒடுங்கியும் பின்பக்கம் அகண்டு ஆப்பு மாதிரி இருக்குமம்மான். அதோடை ஊசிக் கண்டெண்டால் ஏரி இருக்காது. எங்கடை நாட்டு மாடுகளுக்குத் தான் ஏரி; சீமை மாடுகளுக்கு ஏரியே கிடையாது. உதுன்ரை ஏரியைப்பாருங்கோ ஒட்டகத்தின்ரை திமில் மாதிரிக் கிடக்குது. உது எங்கையோ நல்லா வன்னிப் பக்கத்திலை நிண்டு விளைஞ்சமாடு. ஆரோ புண்ணியவான் அங்கையிருந்து கொண்டு வந்து உங்கடை மோன்ரை தலையிலை கட்டிப்போட்டான். இதுகும் பாவம், மாட்டின்ரை பொய் மடியையும் மசத்தையும் பாத்திட்டு பால் மாடெண்டு வாங்கியந்திட்டுது; சரி நான் வரப் போறன்'' என்றவாறு மாடுகளைத் தட்டிச் சாய்த்தான்.

அப்பால் செல்லக்கா மாடுகளுடன் நின்றாள். தாவளை அறுத்து நின்ற செல்லக்காவின் ''மயிலைக்'' கண்டுக்கு தாவளை போட்டவாறு சிங்கன் கேட்கிறான்.

ஒழுங்கை வயலாக விரிகிற இடத்தில் உள்ள பிள்ளையார் கோவில் கேணிமுன் ''ஓவ்... ஓவ்...'' என்று அதட்டல் போட்டு எல்லா மாடுகளையும் நிறுத்தினான் சிங்கன். சிலமாடுகள் அந்தக் கேணிக்குள் இறங்கி நீர் அருந்திவிட்டு மேலே வந்தன. கடைசி மாடு கேணியைவிட்டு வெளியேறும் வரைக்கும் அவனின் ''ஓவ்...ஓவ்...ஓவ்'' என்ற ஒலி ஒரு மாட்டையும் அங்கால் இங்கால் நகரவிட மாட்டாது. கடைசி மாடு கேணியை விட்டு வெளியேறியதும் நாக்கை மடித்து'டிர்— டிர்...' என்ற ஒலியை எழுப்பினான் சிங்கன், மந்தை நகரத் தொடங்கியது.

பிள்ளையார் கோவிலில் இருந்து கிட்டத்தட்ட அரை மைல் தூரத்தில் உள்ள வயல் வெளியின் வயிற்றுப்பாகத்தில் நல்ல புல்லுள்ள இடத்தில் மந்தையை மேயவிட்டுவிட்டு அவன் வழக்கமாக ஓய்வெடுக்கும் நாச்சிமார் கோவிலடிக்குத் திரும்பினான்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### உரிமை வாழ்வுக்கு உயிர்த்தியாகம் செய்தவர்கள்

# ஜாலியன்வாலாபாக் சம்பவமும் எதிரொலியும்

**வி. ரவிச்சந்திரன்**

மகாத்மா காந்தியின் தலைமையில் அகிம்சைப் போராட்டம் நடைபெற்றுக்கொண்டிருந்தது. ஆயினும் குண்டும், வாளும் கொண்டு, தீவிரமாகப் போர் செய்தால்தான் ஆங்கில அரசாங்கத்தை முறியடிக்கலாம் என்ற நம்பிக்கை உள்ளவர்கள், தங்கள் செயல்களை ஆங்காங்கே நடத்திக் கொண்டிருந்தனர்.

1930ம் ஆண்டு, ஏப்ரல் 19ம் திகதி 125 பேர்கள், தளபதி சட்டர்ஜியின் தலைமையில் சென்று, சிட்டகாங்கிலுள்ள ஆயுதக் கிடங்கை முற்றுகையிட்டனர். இதில் பிடிபட்ட தாரகேசுவர் தஸ்தகீர்-ஸாகுர் யலேன் இருவரையும் தூக்கிலிட்டனர். கல்பனு தத் என்ற பெண்மணி ஆயுள் தண்டனை அடைந்தாள்.

1931 செப்டம்பர் 24ல் திப்பெரா ஜில்லா மாஜிஸ்திரேட்டை, உயர்நிலைப் பள்ளி மாணவிகளான சாந்தாகோஷ்-சுமதி சௌதிரி என்னும் இருவரும் சுட்டு வீழ்த்தினர்.

இந்திய சுதந்திரப் போராட்ட வரலாற்றில் ஒரு கறை படிந்த நிகழ்ச்சி, 1919 ஏப்ரல் 13ல் பஞ்சாபிலுள்ள ஜாலியான் வாலாபாக்கில் நடைபெற்ற படுகொலைச் சம்பவம், எந்த ஒரு இந்தியனும் மறக்கமுடியா ஒரு கோரச் சம்பவம் அது. அந்தப் படுகொலைக்குக் கர்த்தாவான மைக்கேல் ஓ-ட்வையர் என்ற வெள்ளையனை உதம்சிங் என்ற பஞ்சாபி இளைஞன் லண்டனில் நடைபெற்ற ஒரு கூட்டத்தில் பகிரங்கமாகச் சுட்டுக் கொன்றான்.

சேர் மைக்கேல் ஓ-ட்வையர் அப்போது பஞ்சாபின் கவர்னராக இருந்தார். ஜாலியன் வாலாபாக் நிகழ்ச்சியின்போது அக்கூட்டத்திற்கு வந்திருந்தோர்க்குத் தண்ணீர் வழங்கிக்கொண்டிருந்தார் உதம்சிங். அப்போதுதான் ஜெனரல் டயர் தன் துருப்புக்களுடன் வந்து, கூட்டத்தினர் மீது கண்மூடித்தனமாகச் சுடத் தொடங்கினான். அதற்குப் பழிவாங்கவே உதம்சிங், மைக்கேல் ஓ-ட்வையரைக் கொன்றார். காரணம் ஜெனரல் டயரைத் தூண்டியதே அவர்தான்.

இந்த வழக்கு லண்டனில் நடைபெற்றபோது, குற்றவாளிக் கூண்டில் நின்ற உதம்சிங், "ஆம், நான்தான் அவரை உயிரற்றவனாக்கினேன் ஆனால் அது படுகொலையல்ல. ஜாலியான்வாலாபாக்கில் என் சகோதர மக்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகளுக்கும், அநீதிக்கும் பழிக்குப்பழி வாங்கினேனே தவிர, இது ஒரு கொலையல்ல" என்று வாக்குமூலம் அளித்தார்.

இந்த வழக்கு 1940-ம் ஆண்டு மார்ச் 14-ம் திகதி லண்டனில் உள்ள காக்ஸ்டன் ஹாரில் நடைபெற்றது.

இந்த பிரசித்தி பெற்ற வழக்கில் உதம்சிங்குக்காக வாதாடியவர்களுள், இந்தியாவின் முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் வி. கே. கிருஷ்ணமேனனும் ஒருவர். அவர் லண்டனில் பாரிஸ்டராகத் தொழில் நடாத்திக் கொணடிருந்தார்.

"இந்த ஜாலியன் வாலாபாக் படுகொலைக்கான திட்டம் கவர்னரான மைக்கேல் ஒட்வையகனல் லாகூரில் ஏப்ரல் 10-ம் திகதி தீட்டப்பட்டது. இதற்கு சூத்திரதாரி கவர்னர் தான். அவர் கட்டளையைக் கண்மூடித்தனமாக நிறைவேற்றும் பணியில் ஈடுபட்டான் கொலைகாரன் டயர். 1913-ல் இருந்து 1919 வரை ஒட்வையர் பஞ்சாப் கவர்ணராயிருந்தார். கொடுமையின் சின்னம் அவர். இந்தியாவின் உயிரை அணு அணுவாகச் சிதைத்தவர்' என்று காந்திஜியே அவரைப்பற்றிக் கூறியுள்ளார்.)

உதம்சிங் 1923-ல் ஒரு மர வியாபாரியின் உதவியுடன் கிழக்கு ஆபிரிக்கா சென்றார். அங்கிருந்து அமெரிக்கா சென்றார். அங்கு கலிபோர்னியா சென்று அங்குள்ள இந்திய சுதந்திர போராட்ட வீரர்களுடன் தொடர்பு கொண்டார். 1938-ல் உதம்சிங் லண்டன் வந்து சேர்ந்தார். லண்டனில் அர்ஜன்சிங்மால் என்பவரோடு தங்கியிருந்தார். அங்குள்ள இந்தியர்கள் உதம்சிங்கை எப்போதும் உணவுக்கும் உறைவிடத்திற்கும் யாசிப்பவன் என்று கேலி செய்வார்கள். ஒரு நாள் இரவு உதம்சிங் தங்கிய அறையில் துப்பாக்கிகள் வெடி மருந்துகள் ஆகியவை பதுக்கிவைக்கப்பட்டிருந்ததைப் பார்த்து அவைகளை தேம்ஸ் நதியில் எறிந்து விட்டார் அர்ஜன்சிங் மால். கடும்குளிரில் உதம்சிங்கை வெளியே துரத்திவிட்டார்.

**கிருஷ்ணமேனன்**

பிறகு உதம்சிங் லண்டனில் பிரபல பாரிஸ்டராக விளங்கிய வி. கே. கிருஷ்ணமேனனுடனும் பத்திரிகையாளரான டி. வி. டஹ்மாங்கருடனும் தொடர்பு கொண்டார். லண்டனில் இந்திய சுதந்திரப் போராட்டத்துக்கு ஆதரவு திரட்ட அடிக்கடி கிருஷ்ணமேனனுடனும் - டஹ்மாங்கரும் கூட்டங்களுக்கு ஏற்பாடு செய்வார்கள், ஒரு சமயம் ஹைட்பாக்கில் ஒரு கூட்டத்தில் டஹ்மாங்கர் பேசிக் கொண்டிருந்த போது மைக்கேல் ஒட்வையர் அந்தப் பக்கம் சென்று கொண்டிருந்தார். அப்போது அவர் கவர்ணர் பதவியிலிருந்து இளைப்பாறி லண்டனில் ஹைட்பாக் அருகில்தான் வசித்து வந்தார். அப்போது உணர்ச்சிவேகமாக இந்தியாவின் சுதந்திர வேட்கையைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்த டஹ்மாங்கரை நோக்கி "நீங்கள் சுதந்திரத்திற்கு அருகதையற்றவர்கள்; இந்தியாவிலுள்ள லட்சக் கணக்கான தீண்டாதவர்களின் கதி என்ன?" என்று ஒட்வையர் கேட்டார். "நீ தான் தீண்டத்தகாதவன். இந்த ஜாலியான்வாலா பாக் கசாப்புக் கடைக்காரனைப் பார்த்து எல்லோரும் சிரியுங்கள்" என்று சூடாகப் பதிலளித்தார் டஹ்மாங்கர். அப்போதுதான் ஒட்வையரைமீண்டும் பார்த்தார் உதம்சிங். அவர் வசிக்கும் இடத்திற்கு அருகிலேயே தன்னுடைய இருப்பிடத்தையும் மாற்றிக் கொண்டு அவரைக் கண்காணித்து வந்தார்.

1938—39-ல் ஜெர்மனிக்கும் மற்ற ஐரோப்பிய நாடுகளுக்கும் விஜயம் செய்தார். மீண்டும் 1940-ல் லண்டன் திரும்பினார். 1940-ம் வருடம் மார்ச் மாதம் 13-ம் திகதி லண்டன் மாநகரின் மத்தியில் உள்ள காக்ஸ்டன் ஹாரில் ஒரு பொதுக்கூட்டம் நடைபெற்றது. கிழக்கு இந்திய சங்கம் மத்திய ஆசிரியர்கள் சங்கம் ஆகியவற்றின் சார்பில் ஏற்படுத்தப்பட்டது அக்கூட்டம். ஜெட்லன் பிரபு கூட்டத்திற்கு தலைமை வகித்தார். மைக்கேல் ஒட்வையர் அந்தக் கூட்டத்தில் பேசுவதற்காக வந்திருந்தார். ஒட்வையர் தன்னுடைய பேச்சை முடித்துவிட்டு சபையிலுள்ளோரின் கைதட்டல் ஆரவாரத்திற்கிடையே தன்னுடைய ஆசனத்தை நோக்கி வருவதைக் கண்டார் உதம்சிங். உடனே துப்பாக்கியை எடுத்து ஒட்வையரைப் பார்ந்து சுட்டார் உதம்சிங். அச்கொடுங்கோலன் உயிரை சல்லடையாகத் துளைத்துவிட்டார். உதம்சிங் கைது செய்யப்பட்டு 1940-ம் ஆண்டு ஜூலை மாதம் 31-ம் திகதி லண்டன் சிறைச்சாலையில் தூக்கிலிடப்பட்டர். அப்போது அவருக்கு வயது 37.

உதம்சிங் தூக்கிலிடப்பட்டபோது இந்தியர்கள் அடங்கிய சிறு கூட்டம் சிறைச்சாலைக்கு வெளியே கண்ணீர்மல்க நின்று கொண்டிருந்தது.

---

### "நாவலரின் ஞானகுரு யார்?"

# பண்டிதமணி தந்துள்ள அரிய ஆராய்ச்சிக் குறிப்பு

**த.சண்முகசுந்தரம்**

"யாழ்ப்பாணத்து நல்லூர் ஆறுமுகநாவலரின் ஞான குருயார்? அப்படியாராவது இருந்தார்களோ?" என்ற கேள்வியைச் சிலர் எழுப்பி உள்ளனர் கடந்த ஆண்டிலே நாவலர் மறைந்த நூற்றாண்டு விழா மிகவும் சிறப்பாக ஈழத்தின் பல பாகங்களிலும் நடந்தேறியது. அந்த வேளையின் போது தான் "நாவலரின் குயார்?" என்ற கேள்வி எழுந்தது,

நாவலர் பெருமான் ஐந்தாம் குரவர் எனப் பலர் போற்றுகின்றனர். நாவலருக்குக் குருபூசை செய்கின்றனர். இதனை விருப்பாத ஒரு சிலர் இந்தக் கேள்வியைக் கிளப்பிவிட்டனர் எனவும் சொல்லப்படுகிறது. இந்தக் கேள்விக்குப் பொருத்தமான ஆராய்ச்சிக் குறிப்பைத் தரவல்லவர் சித்தாந்தசாகரம் பண்டிதமணி இலக்கிய கலாநிதி சி. கணபதிப்பிள்ளை அவர்களே தனக்குரிய பாணியில் சுருக்கமாகக் தெளிவாகப் பண்டிதமணி விளக்கம் தந்துள்ளார். அவர் இதுபற்றி எழுதிய ஆராய்ச்சிக்குறிப்பான "நாலு வரி" "நாலு கோடி" பெறும். நாவலரின் ஞானகுருவானவர் வண்ணை வைத்தீசுவரர் கோயிலிலிருந்து அருள்மழை பொழியும் தட்சணாமூர்த்தியே எனப் பண்டிதமணி முக்கியமான இரண்டு சான்றுகளைத் தந்து செய்தித்தாழ் மூலம் விளக்கம் தந்துள்ளார். முதலாவது சான்று அகச் சான்று. இரண்டகவது சான்று நாவலர் பற்றிய அறிஞர் கூற்று. இந்த இரண்டு சான்றுகளையும் இங்கு நோக்கலாம்.

"நாயினும் கடையனாகிய என்னை ஒருபொருளாகக்கருதி ஆட்கொண்டருளிய கிருபா சமுத்திரமாகிய ஸ்ரீமத் குருமூர்த்தியுடைய திருவடிகளைச் சிந்தித்துத் துதித்து வணங்கி அவரது திருவருளினாலே......"

"திருத்தொண்டர்
புராணவசனம்"
ஸ்ரீ. ஸ்ரீ. ஆறுமுகநாவலர்
பக். 3. பதிப்பு 54.

இந்த வரிகளை மேற்கோளாகக்காட்டிய பண்டிதமணியின் [illegible] லருக்குத் தென் திசைக் கடவுளின் அருட்பார்வை கிட்டியுள்ளது என்பதைப் பண்டிதமணி சுட்டிக்காட்டியுள்ளார். தமிழுக்காக, சைவத்திற்காகப் போராடியவர் நாவலர்; வீறுடன் போராடியவர்; ஆனல் தம்மைப் பொறுத்தவரையில் நாவலர் மிகவும் அடக்கமானவர், பண்புடையவர். ஆகவே தனக்குப் பூர்வபுண்ணிய வசமாகக் கிடைத்த இறை இன்பத்தை அவர் பகிரங்கமாகக் கூறவில்லை. நாதன் முடிமேல் நான் இருக்க வேண்டும் எனக் கூறவில்லை. தா்ன் பெற்ற இறை இன்பத்தைத் தன்னுள்ளே வைத்திருந்தார். பத்திய ரூபமாக இருந்த திருத்தொண்டர் புராணத்தைக் கத்திய ரூபமாக்குமிடத்து நாவலர் அந்த இன்பத்தைக் கூறியுள்ளார். தோன்றாத சிவநாதனே நாவலருக்குக் குருநாதனாக வந்தார். ஞானசம்பந்தப்பிள்ளைக்குப் பசியை வருவித்தும், நாவுக்கரசருக்குச் சூலையை வருவித்தும், சுந்தரருக்கு மால் என்னும் மயக்கத்தை வருவித்தும் மணிவாசகருக்குக் குருந்த மரத்தடியில் அரண்மனை வாழ்வின் மயக்கத்தைப் போக்குவித்தும் ஆட்கொண்டார் சிவநாதன்; தோன்றாத சிவநாதன்தோன்றி மறைந்தார். இங்கு கவனிக்க வேண்டியது ஒன்றும் இருக்கின்றது. தோன்றாத சிவநாதன் குருநாதனாகவந்து தோன்றி மறைவதும் சைவசித்தாந்தம் தரும் உண்மை. இறை இன்பன் பெற்ற மாதவன் ஒருவன் மானிடவடிவில் இருப்பான். அவன் வெறும் மனிதன் அல்லன். தோன்றாத சிவநாதனின் மனிதத் தோற்றம் இந்த மாதவன். இவன் குருநாதன். "பட்டகட்டையிற் பகற்குருடன் போகின்றான்" என்ற நிகழ்ச்சி இதனையே உணர்த்துகிறது. இந்தச் சைவசித்தாந்தமரபை ஒட்டியே பண்டிதமணி விளக்கம் தந்துள்ளார். நாவலரைப் போலவே, "நந்தன் கீர்த்தனை" பாடிய கோபாலகிருட்ண பாரதியார் இறை இன்பம் பெற்றார். இதனைத் தமிழ்த்தாத்தா உ. வே, சாமிநாதையர் நன்கு விளக்கியுள்ளார். தோன்றாத சிவநாதனே, அண்ணாமலைப் பேரொளியாகிப் மகவான் இரமணரைத் தடுத்தாட்கொண்டார். இது இக்காலத்தில் நிகழ்ந்த உண்மை. "இரமணருக்கு யார் ஞான குரு?" என்ற கேள்வியை யாராவது கிளப்புவாரோ?

செவி வழி வந்துள்ள கதைப்படி நாவலர் தட்சணாமூர்த்தியின் முன்பாக இருந்து வழிபடுவார். சிவனின் அருட்பார்வை நாவலருக்குக் கிட்டி

(9-ம் பக்கம் பார்க்க)

---

## வசந்தத்தைத் தேடாதீர்!

ஏழ்மைப் பாலையில் -
தகிக்கும் ஜீவன்கள் நாம்!
குளிர்த் தென்றலென எண்ணாதீர்!
சீதனப் பிணியால் பீடிக்கப்பட்ட -
வாழ்வுலர்ந்த புஸ்பங்கள் நாம்!
தேன் சுரக்குமென நினைக்காதீர்!
துன்பப் பாசி படர்ந்த -
வீணைகள் நாம்!
பல்லவியை எதிர்பார்க்காதீர்!
உணர்வற்ற சிலைகள் நாம்!
அசைவுக்காய் ஏங்காதீர்!
இன்பக் கிளைகளை உதிர்த்துவிட்ட -
பட்ட தனி மரங்கள் நாம்!
கனிகளுக்காய் காத்திருக்காதீர்!
சமுதாயத்தின் போலி அந்தஸ்து -
புகையினால் ஊனமாகிவிட்ட -
விழிகள் இவை!
காட்சி காட்டத் துணியாதீர்!
வாழ்வின் அவலத்தைக் கண்டு -
குமுறி எழும் புரட்சிக் கவிகள்நாம்!
இங்கு இனிமைக்கு இடமில்லை!
ஓ...... எம் வாழ்வு மணற்தரையில் -
மனக் கொடியில் - மலர்ந்த -
நினைவு, உணர்வுப் புஷ்பங்கள் -
கனவாய் கானலாய் சிரிக்கையில் -
எம்முள் வசந்தத்தைத் தேடாதீர்!

— மண்டைதீவு கலைச்செல்வி

---

## புற்றுநோய்க்கு ஆயுர்வேத மருந்து

புற்றுநோய்க்கு ஆயுர்வேத மூலிகைகளிலிருந்து புதிய மருந்தை இந்தி மருத்துவர்கள் கண்டு பிடித்திருக்கிறார்கள்.

சென்னை அடையாறு புற்றுநோய் ஆராய்ச்சிக் கழக நிபுணர்கள் தம் ஆராய்ச்சியின் பயனாக மிக பெரிய மூலிகைப் பொருள் களிலிருந்து இந்த மருந்தை கண்டு பிடித்திருக்கிறார்கள்.

நித்தியகல்யாணி — தூதுவளை, பச்சை மிளகாய் ஆகிய பொருட்களிலிருந்தே இந்த மருந்து கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. தமிழகத்திலுள்ள ஆராய்ச்சி நிலையத்தில் இம்மருந்து கண்டுபிடிக்கப்பட்ட அதேசமயம், அதே மூலிகைகளிலிருந்து புற்றுநோய்க்கான மருந்தொன்றை மகாராஷ்டிரத்திலுள்ள புற்றுநோய் ஆராய்ச்சி நிலையத்தினர் கண்டு பிடித்துள்ளதாகச் செய்தி வந்துள்ளது.

மேற்கூறிய மூலிகைப் பொருட்களிலுள்ள புற்றுநோயை நீக்கும் மருந்துச் சத்துக்களைப் பிளிந்தெடுத்ததின் மூலம் இப்புதியமருந்து கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாம். மேலும் இம் மருந்துக்கான செலவும் மிகக் குறைவாக இருப்பதாகக் கூறப்படுகின்றது.

(ஆதாரம்:- அறிவியக்கம்)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## பல் பாதுகாப்பு - 3

# பொதுவான கேள்விகளும் அவைக்கான பதில்களும்

பல்வைத்திய கலாநிதி
**இ. ந்த்தியானந்தன்**

மலக்குளூசன் (Malocclusion) விருத்தியடைவதுடன் தொடர்பான பழக்கங்கள் திருத்தப்படவேண்டும். பல்வைத்தியரிடம் ஒழுங்காகச் செல்லுதல் வரப்போகும் அசாதாரண நிலையை தடுக்க உதவி செய்யலாம். ஏற்கனவே இருக்கும் அசாதாரண நிலையை இனங்காணவும் அதனை ஏற்ற காலத்தில் பரிகரிக்கவும் இது உதவும்.

**பொதுவான கேள்விகளும் பதில்களும்:-**

1. கேள்வி: முதன் முதலாக குழந்தை பல் வைத்தியரிடம் எப்பொழுது கொண்டு செல்லப்பட வேண்டும்?

பதில்: உதிருகின்ற பற்கள் யாவும் வெளிப்பட்டவுடன் வழமையாக ஒன்றரை இரண்டு வயதளவில் குழந்தை பல்வைத்தியரிடம் கொண்டு செல்லப்பட வேண்டும். குழிகள் எதும் இல்லாவிடினும் ஒழுங்கான பரீட்சைக்கு குழந்தை பழக்கப்படுவது பின்பு வைத்தியரிடம் செல்லும் வேளைகளிலுள்ள கஷ்டங்களைக் குறைக்கும். பல் வைத்தியர் சிதைவுகளைக் கண்டுபிடிப்பதற்கும் அகற்றுவதற்கும் இது உதவும். வேறு பற்குறைபாடுகளையும் அவற்றின் ஆரம்பவேளைகளில் அறிவதற்கும் இது உதவும். வைத்தியரைக் காணல் பெற்றோருக்கும் குழந்தைக்கும் உபயோகமான பல ஆரோக்கிய கல்வியைப் பெறும் வாய்ப்பை அதிகரிக்கின்றன.

2. கேள்வி: பல்வைத்தியரிடம் முதன் முதலாக செல்வதற்கு முன் பிள்ளையை எவ்வாறு தயார் செய்தல் வேண்டும்?

பதில்: முக்கியமானது பயத்தைத் தவிர்த்தலாகும். பற்களைப்பற்றி சரியான மனோநிலையைப் பிள்ளை பெறுவதற்கு பெற்றோர் உதவிசெய்ய வேண்டும். ஆரம்ப வயசுப் பிரிவில் உள்ள பிள்ளைகள் மற்றவர்களை உதாரணமாகக் காட்டினால் புரிந்துகொள்வார்கள். பெற்றோர்கள் சந்தர்ப்பம் ஏற்படும்பொழுது பற்பாதுகாப்பின் தன்மைகளை உதாரணமாக பற்களை சுத்தமாக வைப்பதுபற்றிக் கூறலாம்.

3. கேள்வி: பல் வைத்தியரிடம் ஒழுங்காக பிள்ளை செல்வதால் ஏற்படும் அனுகூலங்கள் யாவை?

பதில்: ஒழுங்காக அடிக்கடி பல்வைத்தியரிடம் செல்வதால் புதிய குழிகளை வெளிப்படுத்துவது, பல்நோய்களின் வேறு அறிகுறிகளைத் தெரிதல் பற்களும் முரசும் வளர்வதில் உள்ள ஒழுங்கீனங்களை அறிதல் முதலியனவற்றிற்கு உதவும். இவற்றை ஆரம்ப நிலைகளில் அறிந்தால் அவற்றை திருத்துவதற்கு வழிவகுக்கலாம். பற்களை ஆரம்பத்தில் பராமரித்தல் நோவைத் தவிர்த்து பற்கள் இழப்பதைத் தவிர்த்து பாரதூரமான சிக்கல்களையும் அகற்றும்.

4. கேள்வி: வைத்தியரைப் பார்க்கவேண்டிய கால இடைவேளை என்ன?

பதில்: பொதுவாக பல் வைத்தியரை வருடத்தில் மூன்றுமுறை அல்லது அதிலிருக்கும் இடைவேளைகளில் காணவேண்டும்.

### பற்களின் எண்ணிக்கை

1. கேள்வி: உதிரும் பல்லமைப்பிலும் நிலையான பல்லமைப்பிலும் எத்தனை பற்கள் உள்ளன?

பதில்: வழமையாக 20 உதிருகின்ற பற்களும் 32 நிலையான பற்களும் இருக்கின்றன, சில மனிதரில் 1 அல்லது மேற்பட்ட பற்கள் காணுமல் இருக்கலாம். இவை முளைக்காத பற்களென்று நினைக்கக் கூடாது. சிலரில் 1 அல்லது மேற்பட்ட மேலதிக பல் காணப்படலாம், இது மிகை அதிக பல் எனப்படும்.

### உதிரும் பற்கள்

1. கேள்வி: உதிரும் பற்கள் எப்பொழுது வெளிப்படுகின்றன?

பதில்: பற்கள்வெளிப்படும் சராசரி வயது பின்வருமாறு: வெட்டும் பற்கள்: 6 மாதம்; வேட்டைப்பற்கள்: 18 மாதம், முன்கடைவாய்ப்பல்: 12மாதம் 2ம் கடைவாய்ப்பல்: 29 மாதம்

2. கேள்வி: அ. உதிரும் பற்களை ஏன் பராமரிக்கவேண்டும்?

ஆ. அவற்றில் குழிகள் ஏற்பட்டால் ஏன் நிரப்ப வேண்டும்?

பதில்: இவை வளர்ச்சியின் முக்கிய வேளையில் அரைப்பதற்குத் தேவை. துணையாக. பற்கள் வெளிப்படுவதற்கும் தாடைகள் சாதாரண வளர்ச்சி அடைவதற்கும் உதிருகின்ற பற்கள் அவசியம், உதிருகின்ற பல் ஒன்று அகாலமாக விழுந்தால் அவ் இடைவெளியின் இருபக்கங்களிலுமுள்ள பற்கள் இரண்டும் ஒன்றையொன்று நெருங்கி அடுத்த நிலையான பல் வளர்வதற்கு இடமளிக்காது.

3. கேள்வி: உதிருகின்ற பல்லொன்று மிகவும் அகாலமாக இழக்கப்பட்டால் இடைவெளியை நிலைத்திருக்கச் செய்யும் பொருள் வைக்கப்பட வேண்டுமா?

பதில்: இது சில வேளைகளில் அவசியமானது. ஆனல் பல்வைத்தியர் இதனைப் பிள்ளைக்கு ஏற்றவாறு தீர்மானிக்க வேண்டும்.

### பிள்ளையின் நிலையான பற்கள்

1. கேள்வி: நிலையான பற்கள் எப்பொழுது வெளிப்படுகின்றன?

பதில்: வெளிப்படும் சராசரி வயது பின்வருமாறு:

வெட்டும் பல் 7 வயது, வேட்டைப் பல் 11 வயது, 1-வது முன் கடவாய் பல் 10 வயது, 2-வது முன்கடவாய் பல் 11 வயது, 1-வது கடவாய்ப் பல் 6 வயது, 2-வது கடவாய்ப் பல் 12 வயது, 3-வது கடவாய்ப்பல் 19 வயது.

2. கேள்வி, உதிருகின்ற பற்கள் குறைவாக விருத்தியடைந்தால் அல்லது ஒழுங்கற்றிருந்தால் நிலையான பற்களும் பிழையாக இருக்குமா?

பதில்: கனிட பொருளாக்கக் குறைபாட்டினலேயே பற்கள் பூரண விருத்தியடைவதில்லை. உதிருகின்ற பற்களின் கனிப்பொருளாக்கம் குழந்தை பிறப்பதற்கு முன் ஓரளவு முற்றுப் பெறுகின்றது. நிலையான பற்களின் கனிப்பொருளாக்கம் குழந்தை பிறந்த பின்பே நடைபெறுகின்றது. எனவே குழந்தையின் உணவு கனிப்பொருளாக்கத்தை பாதிக்கின்றது. உதிருகின்ற பற்களின் அமைப்பில் குறைபாடு இருந்தால் நிலையான பற்களும் ஒப்பானமுறையில் பாதிக்கப்படும் என்று சொல்ல முடியாது. உதிருகின்ற பற்கள் ஒழுங்கற்று இருக்கும்போது நிலையான பற்களும் ஒப்பான முறையில் பாதிக்கப்படுமா என்பது ஆளுக்கு ஆள் வேறுபடும்.

3. கேள்வி: பிள்ளையின் நிலையான முன்பல் ஒன்று தற்செயலாக உடைந்தால் என்ன செய்ய வேண்டும்?

பதில்: பிள்ளை உடனடியாக பல்வைத்தியரிடம் கொண்டு செல்லப்பட வேண்டும். சில மணிநேரத் தாமதம் கூடப் பல்லைப் பாதுகாப்பதை வெற்றிகரமற்றதாக்கலாம்.

### பிள்ளையின் பற்சோதிப்பும் பரிகாரமும்

1. கேள்வி. ஒழுங்கான பற்சோதனையைச் செய்வதற்கு பிள்ளையை எவ்வாறு ஊக்குவிக்கவாம்?

பதில்: நல்ல ஆரோக்கிய பழக்கமாக பிள்ளை ஒழுங்காக பல் வைத்தியரிடம் செல்வதை ஊக்குவிக்க வேண்டும். பாதுகாப்பு சாதாரண வாழ்க்கையின் ஒரு பழக்கமாகக் கருதப்பட வேண்டும்.

## கடந்த வாரக் கதை

கணபதி கணேசன் எழுதிய "ஆத்மாவின் உயிர்ப்புக்கள்" படிப்பினை ஊட்டும் படைப்பு. ஒரு இளம் தாயின் இதயக் குமுறல் பிரிவின் தகிப்பு மனதை உருக வைக்கும்- அதே வேளை பிள்ளை இறந்து இரண்டு வாரங்களுக்குள்ளேயே..... தன் மனைவியும் தன்னைப்பிரிந்து விடுவாளோ.....? என ஏங்கும் சுந்தரத்தின் பலயீனம்..... மனத் தளர்வு..... அழகாய் சித்தரிக்கப்பட்டுள்ளது. "......குழந்தையை பிரிந்த துக்கத்தில் ஒரு மனைவிக்குரிய கடமையுணர்வுகளிலிருந்து தவறிவிட்ட நான் கொஞ்சங்கூடப் பொறுப்பில்லாமல் நடந்திட்டன்....." இவ்விடத்தில் ஆசிரியர் சொல்ல வந்ததை அறிவுரையாய்..... அழகாய்ச்..... சொல்லி விடுகிறார்.

திருமதி கோகிலா மகேந்திரனின் கட்டுரைகள் எம்போன்ற மாணவர்க்கு மட்டுமன்றி மற்றவர்கட்டும் பயன் தரும். தொடரட்டும் அவர் பணி! வாழ்த்துக்கள்!

—மண்டைதீவு
கலைச்செல்வி

---

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

# நல்லூர் கோட்டையும்...

உள்ள பகுதி), யமுனரி முதலியவற்றையும்,

தென்கிழக்குப்பகுதி சாயாக்காரத்தெரு, ஸ்டயர்ஸ்தெரு-தட்டாதெரு, கொப்பர்ஸ்மித் தெருஆகியவற்றையும், தென்மேற்குப்பகுதி செட்டித்தெருவையும், வடமேற்குப் பகுதி பண்டாரக்குளம், அரசவெளி, தென்னந்தோப்பு முதலியவற்றையும் உள்ளடக்கியிருப்பதை அவதானிக்கலாம்.

அத்தோடு நல்லூர்க் கோட்டையின் பிரதான வீதிகள் சந்திக்குமிடம் முத்திரைச்சந்தையென்றும் கூறப்படுவதையும் அவதானிக்கலாம். நல்லூர் கோட்டையின் உள்ள மைப்பிலொருவித ஒழுங்கு இருப்பதை இப்பொழுது அவதானிக்கக்கூடியதாக இருக்கிறதல்லவா?

இந்நல்லூர்க் கோட்டையின் நடுப்பகுதியில் மாலை நேரத்தில் கூடுமொரு சந்தை இருந்ததைப் போர்த்துக்கேயரின் நூல்கள் ,வாயிலாக அறியக்கூடியதாகவுள்ளது. அதனல்தான் அப்பகுதி முத்திரைச்சந்தை எனப்படுகிறது போலும். அச்சந்தைக்கண்மையில் அரசனது மாளிகையிருந்தது; அரசன் தனதிருப்பிடத்திலிருந்து சந்தை நடைமுறைகளைப்பார்க்கக்கூடியதாகப் பல யன்னல்களுடன் கூடியதொரு அமைப்பாக அச்சந்தை விளங்கியது. இதிலிருந்து சந்தைக் கண்மையில் அரச மாளிகையிருந்திருக்கவேண்டும்.

இனி, நல்லூர்க் கோட்டையினுள் வீதிகளால் பிரிக்கப்பட்ட நான்கு பகுதிகளையும் பார்ப்போமாயின், தென்கிழக்குப் பகுதியில் நிச்சயமாக அரசனது மாளிகை இருந்திருக்கமுடியாது, அப்பகுதி பொற்கொல்லர், கன்னர், நெசவாளர் முதலிய மக்களிற்கான இருக்கை.

எஞ்சிய மூன்று பகுதிகளில் தற்போது காணப்பெறும் அழிபாடுகள் என்பவற்றைக் கொண்டு ஆராய்கையில் வடகிழக்கு, வடமேற்குப் பகுதிகளிலொன்றிலேயே அரச மாளிகையிருந்திருக்க வேண்டும்.

### நீராடும் கேணியா?

முதலில் சங்கிலியன்தோப்பு பழைய நல்லூர் ஆலயம், யமுனரி முதலியவற்றை உள்ளடக்கிட வடகிழக்குப் பகுதியைப் பார்ப்போம். பெரும்பாலான சரித்திர அறிஞர்கள் சங்கிலித்தோப்பு எனத் தற்போதழைக்கப்படும் பகுதியிலேயே அரசனது அரண்மனை இருந்ததாகக் கருதுகின்றார்கள். 1903ம் ஆண்டில் யாழ்ப்பாண அரசாங்க அதிபராயிருந்த திரு. ஜே, பி. லூயி (J. P. Lewis) - என்பவரும் சங்கிலித் தோப்பிலேயே அரசனது அரண்மனை இருந்ததாகவும், யமுனரி அரசர்களும் அரசிகளும் நீராடிய எரியெனவும் கருதுகின்றார்.

யாழ்ப்பாண வைபவமாலை முதலான நூல்களிலிருந்து புண்ணிய யமுனையிலிருந்து கொண்டுவரப்பட்ட தீர்த்தம் விடப்பட்ட [illegible] லேயே யமுனரி எனப்பட்டதாக அறியக்கிடக்கின்றது. இப்பகர வடிவக்கேணி அரசர்களும் அரசிகளும் நீராடுதற்கு உபயோகப் படுத்தப்பட்டதாயின் அருகிலிருந்து பழைய கந்தசுவாமி ஆலயத்தைச் சேர்ந்த தீர்த்தக் கேணி எங்கிருந்ததாம்? எந்தப் பெரியதொரு இந்து ஆலயமாவது தீர்த்தக் கேணியின்றிக் கட்டப்பட்டதுண்டா? அரசனும், அரசியும் நீராடும் கேணியில் எதற்காகப் புனித யமுனையின் தீர்த்தம் கொண்டுவரப்பட்டது. இவற்வையெல்லாம் வைத்துப் பார்க்கும்போது யமுனரி அரசன் அரசிமார் நீராடியதற்குப் பயன்படுத்தப் பட்டதென்பதற்கான சான்றுகளைவிட கந்தசுவாமி (பழைய) ஆலயத்திற்குரிய தீர்த்தக் கேணி என்பதற்கே சான்றுகளுள.

மேலும் பழைய நல்லூர் ஆலயமானது சுற்றுமதில்களுடன் கூடிய பெரியதொரு ஆலயமாகவிருந்ததென அறியப்படுகின்றது. சங்கிலித் தோப்பெனப்படும் பகுதியானது. பழைய கந்தசுவாமி ஆலயத்தைத் சேர்ந்த பூங்காவாகவும், அதன் நடுவிலமைந்திருக்கும் யமுனரி கோயிலின் தீர்த்தக் கேணியாகவும் இருந்திருக்க வேண்டுமென்றே படுகின்றது.

ஒல்லாந்தர் இந்தப் பூங்காவின் அழகையும், யமுனரியையும் கண்டு தங்கள் அரசாங்க மாளிகையை இப்பகுதியில் அமைத்தார்கள் போலும். அவ்வரசாங்க மாளிகையின் முகப்பே தற்போது காணப் படும் பழமை வாய்ந்த அழி பாடாகும். இதன் அமைப்பு [illegible] வகையைச் சேர்ந்ததென்பதே சுவாமிஞானப்பிரகாசர், லூயி போன்றோரின் கருத்தாகும்.

அப்படியாயின்பழைய தமிழ் மன்னரின் அரண்மனை எங்கிருந்தது என்றொரு கேள்வி எழுகின்றதல்லவா? நிச்சயமாகச் சந்தைக்கண்மையில் அமைந்திருக்க வேண்டும். அப்படியாயின் வடமேற்குப் பகுதியிலேயே அரசமாளிகைகள், பொய்கைகள் அமைந்திருக்க வேண்டும். இப்பதியில் அரச மாளிகைகள், நீராடப்பொய்கைகள், அமைந்திருக்கலாமென்பதற்குச் சான்றுகள் உள.

பழைய நல்லூர்க் கோட்டை என என்னல் மேற்கூறப்பட்ட பகுதியில் யமுனரியைத் தவிர எஞ்சியிருக்கும் ஒரே குளம் இப்பகுதியிலுள்ள பண்டாரக் குளமே. இக்குளத்திற் கண்மையில் பழைய கட்டடச் சிதைவுகளுள்ளன. மேலுமிதற்கருகாமையில் அரசவெளியெனப்படும் வெளியும், அரச வீதியும், தற்போதைய ஆலயத்திற்குச் சொந்தமான ஆறு எக்கர் விஸ்தீரணமுள்ள தென்னந்தோப்பும் உள்ளன. அத்தோப்பின் வாயிற்றூணில் 'பண்டார மாளிகை' என்ற பெயரைக் காணலாம். இது பராசசேகர பண்டாரத்தைக் குறிக்குமெனக் கருதுகின்றார் திரு. குல. சபாநாதன் அவர்கள்.

இவற்றைப் பார்க்கும்போது இப்பகுதியிலேயே அரசனது அரண்மனை நீராடும்பொய்கை [பண்டாரகுளம்], என்பன இருந்திருக்க வேண்டுமெனப் படுகின்றது. மேலுமிப்பகுதியிலேயே அமைச்சர், அந்தணர் முதலியோரின் இருக்கைகளும் இருந்திருக்க வேண்டும் என்று படுகின்றது.

எஞ்சிய தென்மேற்குப் பகுதியிலேயே படைவீரர், வணிகர் முதலானேரின் இருக்கைகள் இருந்திருக்கவேண்டும். செட்டி வீதி இப்பகுதியிருப்பது இதற்காதாரமாகவுளது.

இவ்வாறு வெகு நேர்த்தியாக அமைக்கப்பட்டிருந்த நல்லூர்க் கோட்டையின் கிழக்கு, மேற்கு, வடக்கு, தெற்கு வாசல்களிற்கண்மையில் மடங்கள் காணப்பட்டன. கந்தர்மடம், நாயன்மார்க்கட்டுப் பகுதிகள் இவற்றிற்குச் சான்று பகர்கின்றன. இம் மடங்களிற்கண்மையில் குளங்களும் வெட்டப்பட்டிருந்தன.

மேலும் தமிழ் மக்கள், உழவுத்தொழில் புரிபவர்கள் தங்கள் காவல் தெய்வமாக விநாயகரையே வணங்குவார்கள். அதனல்தான் போலும் வயல்களிற்கண்மையிலுள்ள கிழக்கு வாசலில் வெய்யிலுகந்த பிள்ளையார் ஆலயத்தை மன்னர் நிறுவினன் போலும். இதே போல் தமிழ் மக்கள் வீரத்திற்குக் கொற்றவையையே, காளியம்மனையே வணங்குவது வழக்கம். ஆனைக்கொட்டாரங்கள் முதலிய போருடன் சம்பந்தப்பட்ட பகுதிகள் அடங்கிய மேற்கு வாயிற்காப்பாக வீரமாகாளியம்மன் ஆலயத்தை மன்னன் நிறுவினன் போலும்.

இதுவரை நான் கூறியவை நல்லூர்க் கோட்டையின் அமைப்புப்பற்றிய எனது முடிவுகள். இதனை முதற்படியாக வைத்து இன்னும்பலர் நல்லூர்க் கோட்டை அமைப்பு முறை பற்றியும்' நகர் அமைப்பு முறை பற்றியும் ஆய்வுகள் செய்து உண்மைகளை வெளிக்கொணர முயல்வார்களெனஎதிர்பார்ப்போம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகாவலி

## அபிவிருத்தித் திட்டம்

### செல்வி சித்திராதேவி காராளசிங்கம்

(உடுப்பிட்டி மகளிர் கல்லூரி, க.பொ.த. உயர்தரம்)

ஆறில்லா ஊருக்கு அழகு பாழ் என்றுர் ஔவை மூதாட்டி. நம்நாட்டில் மூன்றில் ஒரு பகுதி ஈரவலயப் பிரதேசமாக நதியின் பாய்ச்சலால் செழிப்புற்று சீர்பெற்றுக் குலுங்க, இன்னொரு பகுதி பாடுபடும் பாட்டாளிகள் இருந்தும், பயிர்ச்செய்கைக்கேற்ற நிலவளம் இருந்தும், நீர்ப்பாசன வசதிக்குறைவால் அழகிழந்து ஒளிகுன்றிக் காணப்படுகின்றது. இந்நாட்டில் பெய்யும் ஒருதுளி மழைகூட மனிதனுக்குப் பயன்படாது கடலுடன் கலக்கக்கூடாது என்று திடசங்கற்பம் பூண்ட பராக்கிரமபாகு மன்னனும் அவன் வழிவந்தோரும் எத்தனையோ நீர்ப்பாசனத் திட்டங்கள் வகுத்து உயர்வலயப் பகுதிக்கு உயிர் ஊட்ட முன்வந்தபோதும், அவ்வாறுவளப்படுத்த முடியவில்லை. மத்திய மலைநாட்டில் உற்பத்தியாகி கரையோரச் சமவெளிகளுக்கூடாக கடலுடன் கலக்கும் மகாவலியை வடக்கே திருப்புவதன்மூலம் பழைய மன்னர்கள் கண்ட கனவுகள் நனவாக வழிபிறந்தது.

(யாழ். நகரில் நடைபெற்ற 'மகாவலி'த் திட்டப் பொருட்காட்சி தொடர்பாக மாணவர்களிடையே நடத்தப்பட்ட பேச்சுப்போட்டியில்உடுப்பிட்டி கல்வி வட்டாரரீதியில் முதலாம் இடத்தையும் யாழ். மாவட்ட ரீதியில் இரண்டாமிடத்தையும் பெற்ற உடுப்பிட்டி மகளிர் கல்லூரி செல்வி சித்திராதேவி காராளசிங்கம் நிகழ்த்திய பேச்சு இங்கு வெளியாகிறது, இவர் 1978ம் ஆண்டுமுதல் வட்டாரரீதியிலும் மாவட்ட ரீதியிலும் நடைபெற்ற பல ஆங்கில், தமிழ் பேச்சுப் போட்டிகளில் பல பரிசில்களைப் பெற்றமை இங்கு குறிப்பிடத் தக்கது.)

உணவு விவசாய ஸ்தாபனம், ஐக்கியநாடுகள் அபிவிருத்தித் திட்டம் ஆகிய இரு உலக ஸ்தாபனங்களின் உதவியுடன் மகாவலி திசைதிருப்புத்திட்டம் 1968ல் உருவாக்கப்பட்டது. 206 மைல் நீளமான மகாவலிகங்கையைத் திசைதிருப்புவதன்மூலம் பின்னணி நிலங்கள் விவசாயத்திற்குட்படுத்தவும் ஜனத்தொகையைப் பரவலாக்கவும் முடியும் என எதிர்பார்க்கப்படுகின்றது. 1972-இல் இத்திட்டம் செயல்படத் தொடங்கியது. இத்திட்டம் படிப்படியாக 30 வருட காலத்தில் பூர்த்திசெய்யப்படுவதாக இருந்தது. எனினும் 77ல் ஆட்சிக்கு வந்த தற்போதைய அரசாங்கம் ஆறு வருடங்களாகக் குறைந்தது. இதனாலேயே இத்திட்டம் துரித மகாவலி அபிவிருத்தித் திட்டம் என அழைக்கப்படுகின்றது.

இத்திட்டம் துரிதப் படுத்தப்பட்டமைக்கு நாம் சில காரணிகளைக் குறிப்பிடலாம். வெளிநாட்டு உதவியுடன் செயற்படுத்தப்பட்டு வரும் இத்திட்டத்தின் வெற்றிக்கு ஸ்திரமான அரசியல் சூழ்நிலை இன்றியமையாததாகும். அடிக்கடி இராணுவக் கிளர்ச்சி காணப்படும் இன்றைய சர்வதேச அரசியல் உலகில் 30 வருடங்களுக்கு ஸ்திரமான அரசியல் நிலை இலங்கையில் நிலவும் என்பதற்கு உத்தரவாதம் என்ன? பணவீக்கத்தால் நாளுக்கு நாள் விஷம்போல் விலைவாசிகள் ஏறிக்கொண்டிருக்கும் இன்றைய பொருளாதாரச் சூழ்நிலையில் 30 வருடங்களுக்கு ஒரு திட்டத்தை வகுப்பதால் திட்டமிட்டதைக் காட்டிலும் 30 மடங்கு செலவு ஏற்பட்டாலும் கூட ஆச்சரியப்படுவதற்கில்லை. அத்துடன் இத்தனை நெடுங்காலத்திற்கு ஈடுபட்டிருப்போமேயானல் எமது புறச்செலவீனங்களைக் கட்டுப்படுத்தி எம்மை பூரணமாக அத்திட்டத்திற்காகவே அர்ப்பணித்திருக்க வேண்டும். இது சாத்தியப்படுமா? இவை எல்லாவற்றையும் மனங்கொண்டே இத்திட்டம் துரிதப்படுத்தப்பட்டது.

இலங்கைமாதா மாவலி அபிவிருத்தித் திட்டம் என்ற மகவை வளர்க்க அரும்பாடு படுகின்றுள். இக்குழந்தையை வளர்த்து நன்னிலைப்படுத்த ஐக்கியராச்சியம், கனடா, மேற்கு ஜெர்மனி, சுவீடன், யப்பான் போன்ற நாடுகளிடம் உதவி கோரியுள்ளாள். உலக நிதி நிறுவனங்களிடம் யாசகம் செய்கின்றுள். மகள் வளர்ந்து செயலாற்றத் தொடங்கியதும் தன்பிரச்னைகள் யாவற்றிற்கும் விடிவுகாலம் வருமென நம்பிக்கை கொண்டுள்ளாள்.

ஒரே கல்லில் இரு மாங்காய்கள் வீழ்த்தல் என்பார்கள். இங்கோ மகாவலி அபிவிருத்தித் திட்டம் என்னும் கல், பல மாங்காய்களை, அதாவது உணவுப் பிரச்னை, நிலப் பிரச்னை, தொழில் பிரச்னை, மின்வலு நெருக்கடி ஆகிய பல மாங்காய்களை வீழ்த்த வல்லதாயின், இது எத்தகைய இமாலய சாதனை.

இத்திட்டம் பூர்த்தியாவதன் மூலம் ஒன்பதரை லட்சம் ஏக்கர் நிலத்தில் மகாவலியாள் தழுவிச் செல்வாள். இந்நிலப்பரப்பில் ஆறரை லட்சம் ஏக்கர், கன்னி நிலப் பகுதியாகும். இக்கன்னிப் பரப்பு மகாவலியின் கடாட்சத்தால் மணளைக் காணும் மணமகள் அலங்காரம் பெறுவதுபோல் கனிதரும் சோலைகளாக, பசும் நெற்பரப்புக்களாக, கரும்புத் தோட்டங்களாக, பசுமை கொஞ்சிக்குலவ களிநடனம் புரியக் காத்திருக்கிறது.

இச்செயற்பாட்டால் வேலை என்னும் தேவதையை வேண்டிப் பல்லாண்டு தவம்புரியும் வாலிபரும், வனிதையரும் அருள் பாலிக்கப்படுவார்கள். 10 லட்சத்துக்கு மேற்பட்டோருக்கு வேலைவாய்ப்பளிப்பாள். விவசாயத்துறையில் இரு சாராரை அமர்த்துவாள். புதிதாக உருவாக்கப்படும் சீனி, கடதாசிக் கைத்தொழில் துறைகளில் இன்னொரு சாராரை இருத்தி வாழவைப்பாள். மக்களின் தேவை கருதி உருவாக்கப்படும் தபால், வங்கி, கல்விச் சேவைகளில் மற்றொரு சாராரை அமர்த்தி மகிழவைப்பாள்.

இன்றைய விஞ்ஞான உலகிலே விஞ்ஞானிகளுக்குச் சவாலாக இருப்பது எரிபொருள் நெருக்கடி. வல்லரசுகளே இதனுல் தடுமாறுகின்றன என்றுல், ஏழை நாட்டவரான நாம் எம்மாத்திரம். இச்சூழலின் நீர்மின் வலுவை அதிகளவு தந்து எம்வயிற்றில் பால் வார்க்க காத்திருக்கின்றுள் அன்னை மாவலியாள். கொத்மலை, ரந்தன்கெல, விக்டோரியா, பொகவத்தன மொறக்கஸ்கந்த நீர்த்தேக்கங்கள் ஊடாக 540 மெகாவோட்ஸ் மின்சக்தியை வழங்கி எம்மை வாழவைக்க, வழி அமைக்கவுள்ளாள். இவ்விதம் இவளது வழி மாறுவதாலேயே வருடா வருடம் வெள்ளப் பெருக்கால் பாதிக்கப்பட்டு அல்லலுறும் கண்டி, கம்பளை, மன்னம்பிட்டிய பகுதி மக்கள் விமோசனம் அடைவார்கள்.

1983-ல் இவளது போக்கு நாம் திட்டமிட்டபடி எதிர்பார்த்த இலக்குகள் யாவற்றையும் அடைய வழி வகுத்தால் ஐக்கிய அமெரிக்காவால் ரென்சிப் பள்ளத்தாக்குத் திட்டம் ஈட்டிக்கொடுத்த வெற்றியைக் காட்டிலும் — எகிப்தின் அஸ்வான் திட்டம் கொடுத்த முன்னேற்றத்தைக் காட்டிலும் பல் படங்கு பலா பலன்களை மாவலி அபிவிருத்தித்திட்டம் எமது பொருளாதாரத்திற்கு ஈட்டித்தரும்.

# நவராத்திரி விழா

இந்துமக்களால் அனுட்டிக்கப்படும் சிறந்த விரதங்களில் நவராத்திரி விரதமும் ஒன்றுகும். இவ்விரதம் புரட்டாதி மாதத்துப் பூர்வபக்கப் பிரதமைத் திதியைத் தொடர்ந்துவரும் ஒன்பது நாட்களும் அனுட்டிக்கப்படுகிறது. தசமித்திதியாகிய பத்தாவது நாள் விஜயதசமி என்றழைக்கப்படும். பராசக்தியைப் போற்றி வணங்கி அவளருள் பெறுவதே இவ்விரதத்தின் நோக்கமாகும். நவராத்திரி விழாவைக் கலைமகள் விழா, சக்திவிழா, ஆயுதப்பூஜை, கும்பப்பூஜை எனப் பலவாறு அழைப்பார்கள்,

நவராத்திரி விரதத்தில் முதல்மூன்று நாளும் வீரத்தாயான துர்க்கையையும். அடுத்த மூன்றுநாளும் செல்வத்திற்கதிபதியாகிய இலட்சுமியையும், இறுதி மூன்று நாளும் கல்விக்களஞ்சியமான கலைமகளையும் நோக்கி அனுட்டிக்கப்படுகிறது. இந்துக்கள் நோற்க்கும் நோன்புகளில் ஒரு மனிதனுக்குத் தேவையான வீரம், செல்வம், கல்வி ஆகிய மூன்றையும் தரக் கூடிய நோன்பு இந்த நவராத்திரி விரதமேயாகும். இவ்வழிபாடு மாணவர்கள் கடைப்பிடிப்பதற்கு மிகவும் உகந்ததாகும்.

பத்தாம்நாள் நடைபெறும் விஜயதசமி விழா வெற்றிப் பெருவிழாவாக நிகழும். இந்த நன்னுளில் மாணவர்கள் ஒன்பதாம் நாள் அடுக்கிவைத்து வழிபட்ட புத்தகங்களைப் பிரித்துப் படிப்பார்கள். தொழிலாளிகள் முதல்நாள் தாம் வைத்து வழிபட்ட ஆயுதங்களை எடுத்துத் தொழில்செய்வார்கள். இந்த நாளிலேயே அம்மன் ஆலயங்களில் 'மானம்பூ' நிகழ்ச்சி நடைபெறும். குழந்தைகளுக்கு வித்தியாரம்பம் செய்தலையும், புதுத் தொழில் ஆரம்பித்தலையும், புதுக்கணக்கு எழுதுதலையும் செய்வதற்கு இந்தநாளையே சிறந்ததாக அன்றும் இன்றும் கொள்ளுகிருர்கள்.

உலகத் தந்தையாகிய சிவபெருமானிடமிருந்து நாம்அருளைப்பெறுவதைவிட அன்னை பராசக்தியிடமிருந்து அருளைப் பெறுவது சுலபமானதாகும்.

எனவே இதனை நன்குணர்ந்து பெரியோரும், மாணவர்களும் இந்த நவராத்திரிச் காலத்தில் அன்னையை வழிபட்டு அவளருள் பெறுவோமாக.

செ. சக்திதரன்
(வசாவிளான் மத்திய மகாவித்தியாலயம்)

# மாணவர் எண்ணம்

'கண்டோஸ்'

## கொஞ்சம் சிரியுங்கள்

டாக்டர்:- உங்களுக்கு உடம்பில் இரத்தமே யில்லை...... நல்லாச் சாப்பிட வேண்டும். இரத்தம் கெட்டுப்போய் தண்ணீர் போல வந்திட்டுது.....!

ராமு:- இந்த விலைவாசி ஏற்றக் காலத்தில் தண்ணீர் மட்டும் தானே குடிக்க முடியுது. அப்ப இரத்தத்திலும் தண்ணீர்தானேயிருக்கும்!.

சுப்பர்-: என்ர மகள் டியூசன் பீஸ் திடீரெண்டு ஐந்து ரூபாயால் கூடிட்டுது எண்டு சொல்லுள்...

சுந்தர்:- கூடும் கூடும்! படத்தியேட்டரில டிக்கட் விலை கூடினல் இவையள் டியூசன் பீசையும் நைசா கூட்டுவினம்!....

வி. சந்திரகுமார்
யாழ். மத்திய கல்லூரி.

## நவராத்திரி

பழம் தமிழ் மக்கள்
பாங்காகப் போற்றிவந்த
பண்பான பொன்னுளாம்
பசுமைநிறை நன்னுளாம்
நவராத்திரி நன்னுளை
நாமெல்லாம் நயமகிழ்
வோம்

ஆண்டுக்கு ஒருமுறை
மலருகின்ற நவமலராம்
நல்லிரவில் மொட்டவிழும்
கட்டழகி மல்லிகைபோல்
ஒன்பது இரவுகள்
ஒளிபரப்பும் வெண்மலராய்
சுகந்தங்கள் பரப்பிடும்
சுந்தர நவமலராய்
கல்லூரிகள் கந்தேர்கள்
இல்லங்கள் ஆலயங்கள்
அத்தனையும் அகமகிழ்ந்து
போற்றும் பெரு
விழாவாம்.

இன்பத் திருநாளாம்
இந்துமத மக்களுக்கு
நாலூறும் பொன்னுளாம்
நவராத்திரி நந்நாளாம்

நற்பேறு நாம்பெற
நவராத்திரி நந்நாளாம்
சக்தியிடம் புத்திபெற
செல்வமகள் பொருள்
நல்க
நவராத்திரி நந்நாளாம்
தெவிட்டாத தேனினு
மினிய
பணிகாரம் படைத்து நம்
பாரம்பரியம் காத்திட
நவரார்த்திரி நந்நாளாம்?

எஸ். ஜே- ரஞ்சி
உரும்பராய் இந்துக்கல்லூரி

## எங்கும் சக்திமயம்

பார்க்கு மிடமெல்லாம் பச்சை நிறமென்று
பாடியே கும்மி அடியுங்கடி
பார்வதி என்கின்ற பாராளும் சக்தியும்
பச்சை நிறமென்று கொட்டுங்கடி.

தேனூறும் சொல்லாலே தெவிட்டாத கதைபேசும்
சிங்காரப் பெண்களும் சக்தியடி
சீருடை யணிந்துமே சேர்கின்ற கல்லூரிச்
சிறுமியருஞ் சக்தி வடிவல்லவோ.

பாலூட்டித் தாலாட்டிப் பண்பாக வளர்க்கின்ற
பாங்கான தாயாருஞ் சக்தியடி
கோலூன்றி நடக்கின்ற 'குடுகுடு' கிழவியும்
குறித்திடிற் சக்தியின் தோற்றமடி.

மயிலினைப் போலவே மலைமீதி லேறியே
ஒயிலாக நடக்கின்ற தோகையரும்
குயிலினைப் போற்குரல் காட்டிடும் கன்னியர்
கூறிடிற் சக்தியின் விம்பமடி.

—இ. சந்திரகுமாரி

நம்பிக்கையான நவநாகரிக தங்க, வைர
நகைகள் வேண்டுமா?

பொ. அம்பலவாணர்

தங்க, வைர நகை வியாபாரம்

119, கஸ்தூரியார் றேட்,
போன்; 7199.

யாழ்ப்பாணம்
தந்தி: வைரம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்படத்திற்கு மாதர்கள் தரும் ஆதரவிற்கு நன்றி

**ராஜா** (யாழ்ப்பாணம்)

தினசரி 4 காட்சிகள்

கலைஞர் கருணாநிதியின் கைவண்ணத்தில் உருவான வசனம்.

ஜெய்சங்கர்-ஜெயசித்திரா—அசோகன் மற்றும் பலர் நடித்த

**வண்டிக்காரன் மகன்**

(ஈஸ்மன் கலர்)

**சாந்தி** (யாழ்நகர்) போன்: 7642

தினசரி 4 காட்சிகள்

100-வது வெற்றித் திருநாளை நோக்கி......

"வெள்ளி விழா"

**நீயா?** வண்ணச்சித்திரம்

Next Attraction: "THE DIRTY DOZEN"

எதிர்பாருங்கள்: திசைமாறிய பறவைகள் கலர்

**ராணி** - யாழ்ப்பாணம்

காலை 10-30, பி. ப. 2-30, 6-30, இரவு 9-45

கமலஹாசன் (இரு வேடங்களில்) ஸ்ரீப்ரியா

**சட்டம் என் கையில்**

(வயதுவந்தவர்களுக்கு மட்டும்)

**வெலிங்டன்** (யாழ்நகர்)

தினசரி 3 காட்சிகள்

சனி-ஞாயிறு 4 காட்சிகள்

கே. பி. சுந்தராம்பாள்

**ஒளவையார்**

**லிடோ** (யாழ்நகர்)

Daily at: 10-30am, 2-15pm, 4-45 pm, 7-15 pm, & 9-30 pm

RIVER OF THEGREAT CAYMAN

**வின்ஸர்** (யாழ்ப்பாணம்)

தினசரி; 10-30, 1-30, 4-30, 7-00

சிவகுமார் — ஜெய்சித்ரா — ஜெயசுதா நடித்த

**வெள்ளிக்கிழமை விரதம்**

**மனோகரா** (யாழ்ப்பாணம்)

தினசரி 4 காட்சிகள்

PETER USTINV, DAVID NIVEN, MIAFARROW in

**DEATH ON THE NILE**

Color

எதிர்பாருங்கள்

**ஒரேவானம் ஒரேபூமி**


# அதிபர்கள் வெற்றிடங்கள் நிரப்படும்

(நெல்லியடி)

யாழ்ப்பாணம் கல்வி மாவட்டத்தில் உள்ள கல்லூரிகளில் காணப்படும் கல்விச் சேவையிலான அதிபர்கள் வெற்றிடங்களை நிரப்ப கல்விச்சேவை ஆணைக்குழு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

மானிப்பாய் இந்துக் கல்லூரியும், யாழ். கனகரத்தினம் மத்தியமகாவித்தியாலயம், கொக்குவில் இந்துமகாவித்தியாலயம் ஆகிய கல்லூரிகளில் கல்விச் சேவையிலான அதிபர் வெற்றிடங்கள் காணப்படுவதாக கல்விச்சேவை ஆணைக்குழு முடிவு செய்துள்ளது.

மேற்படி கல்லூரிகளுக்கு அதிபர்களைத் தெரிவு செய்வதற்காக தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. (அ)

# இன்று வெளியீடு

(யாழ்ப்பாணம்)

"பகவானின் பாதங்களில்" என்ற மு. கனகராசனின் நூல் வெளியீட்டுவிழா இன்று யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் மாலை 4 மணிக்கு இடம்பெறவிருக்கிறது.

திருவாளர்கள் சிவா சுப்பிரமணியம், வ. ந. ஜெபபாலன், மு. நித்தியானந்தன், கே. டானியல், செங்கை ஆழியான், தூஃமான், தெளியான், ஆகியோர்கள் கலந்து கொண்டு உரை நிகழ்த்துவார்கள்.


**வெஸ்லி** (மானிப்பாய்)

தினசரி 6-30, 9-30,

சனி-ஞாயிறு 2-30

எம். ஜி. ஆர். - ஜெயலலிதா

**அரசகட்டளை**

**நர்கம்ஸ்** (சுன்னாகம்)

தினசரி 6-30, 930

சனி, ஞாயிறு 2-15

ரஜனிகாந்த் - படாபட் ஜயலக்ஷ்மி

**ஆறிலிருந்து அறுபதுவரை**

**ஹரன்** (யாழ்ப்பாணம்)

தினசரி 4 காட்சிகள்

விஷ்ணுவர்த்தன் - சந்திரகலா

**அலைகள்**


# தங்கையின் செயலால் மன முடைந்து தற்கொலை

(பண்டத்தரிப்பு)

தனது தங்கை காதலனுடன் வீட்டை விட்டுச் சென்றதைப் பொறுக்க முடியாத இளைஞர் ஒருவர், கிருமிநாசினி அருந்தி தன்னுயிரை மாய்த்துக் கொண்ட சம்பவம் பொன்னாலையில் நடைபெற்றுள்ளது.

இளையதம்பி முருகானந்தன் என்னும் மேற்படி 24 வயது இளைஞரின் மரண விசாரணை திடீர் மரண விசாரணை அதிகாரியும், உத்தியோகப்பற்றற்ற நீதிபதியுமான திரு. கே. சேனாதிராசா முன்னிலையில் நடைபெற்றது. அப்போது காலஞ்சென்றவரின் தந்தை இளையதம்பி என்பவர் சாட்சியமளிக்கையில் தெரிவித்ததாவது:-

"காலஞ்சென்ற எமது மகனுக்கு 5 சகோதரர்களும், 5 சகோதரிகளும் இருக்கின்றனர். சகோதரிகளில் ஒருவர் சமீபத்தில் தனது காதலனுடன் சென்றுவிட்டார். இதையிட்டு காலஞ்சென்றவர் மிகவும் கவலைப்பட்டுக்கொண்டிருந்தார். சம்பவ தினத்தன்று காலையில் அவர் கிருமிநாசினி அருந்தியதாக அறிந்து பார்த்தோம். மயங்கிய நிலையில் இருந்த அவரை மூளாய் கூட்டுறவு வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்றபோது வழியில் இறந்துவிட்டார்."

மூளாய் வைத்தியசாலை டாக்டர் எஸ். மகேந்திரனும் சாட்சியமளித்தார். விசாரணை முடிவில் மரண விசாரணை அதிகாரி தற்கொலை என்று தீர்ப்பு வழங்கினார். சாட்சியங்களை சங்கானை பொலிசைச் சேர்ந்த கான்ஸ்டபிள் டி. ஜி. நளினசேகரா ஆஜர் செய்தார்.

# ஆவலொன்று....

(3ம் பக்கத் தொடர்ச்சி)

தளிர்களைப் பார்க்கிறாள், ஊகும், ஒன்றுகூடத் தலை நிமிர்ந்து நிற்கவில்லை. கோடை மழையின் உக்கிரத்திற்குப் பலியாகி, எந்தவித ஆதாரமுமின்றி வெள்ளத்தோடு அள்ளுப்பட்டு மிதந்து செல்கின்றன! "ஐயோ! என் செல்வங்களை எல்லாம் இழந்துவிட்டு வெற்று நிலமாக, மூளியாக நான் மட்டும் நிற்கின்றேனே! போதும்.....! காற்றே நீ..... நீ எங்கே போய் விட்டாய்? அந்த மேகங்களை அப்பால் அழைத்துச் செல்!" பூமாதேவியின் கதறல் இடிமுழக்கத்தோடு ஐக்கியமாகின்றது. கார்மேகங்கள் பொழிந்த தண்ணீரெல்லாம் பூமாதேவியைத் துடைத்து வழித்துக் கொண்டு, கடற்கன்னியை நோக்கிப் பேராறாக ஓடுகின்றது.

வானமும் பூமியும் மெல்ல மெல்ல இருள் நீங்கிப் புத்தொளி பெற்று விழித்துக் கொள்ளும் போது ஆதரவாக அசைந்து வருடிக் கொடுக்கும் அன்போடு காற்று மெல்ல சலசலக்கின்றது! பூமா சோகம் பொங்க முகத்தை மூடிக் கொள்கிறாள். காற்று இதமாக வருடிக்கொடுக்கிறது.

"பூமா! கண்டு கொண்டாயா? நீ எவ்வளவு தூரம் என்னோடு வாதாடினாய்? இப்போ உன்பேராசை உன்னை என்ன நிலையில் நிறுத்தி வைத்திருக்கிறது பார்த்தாயா? பூமா! உனக்கு அளந்ததுதான் உன்னைச் சேரும். உனக்கு உரியதுக்கு மேலாக நீ ஆசைப்படாதே! அது உனக்கு அழிவைத் தான் தரும்! இனி மேலாவது பொறுமையாக உனக்குரியதைக் கொண்டு நிறைவாக வாழு! நிம்மதி கிடைக்கும்" காற்றின் அறிவுரைகள் பூமாவின் மனதில் நம்பிக்கைத் துளிர்களை நாட்டுகின்றன. அவள் அமைதியாக வானத்தை அண்ணாந்து நோக்குகின்றாள். மேகக் கூட்டங்கள், தென்றல் காற்றின் தாலாட்டில் ஊஞ்சலாடிக் கொண்டிருக்கின்றன.....

# பிணையில் சென்று மீண்டும் திருடினாராம்

(மாவிட்டபுரம்)

திருட்டில் ஈடுபட்டு மல்லாகம் நீதிபதியால் நன்னடத்தைப் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டவர், மீண்டும் திருடுவதில் ஈடுபட்டாராம். இவரைத்தேடி பொலிசார் வலை விரித்துள்ளனர்.

மயிலிட்டியைச் சேர்ந்த என். சண்முகராஜா என்பவர் ஏற்கனவே சைக்கிள் திருட்டு, கைக்கடிகாரத் திருட்டு என்பன சம்பந்தமாக காங்கேசன்துறைப் பொலிசாரால் கைது செய்யப்பட்டு மல்லாகம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டபோது 1 வருட நன்னடத்தைப்பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார்.

இந்நபர் மீண்டும் தையிட்டியைச் சேர்ந்த வீடொன்றுக்குச் சென்று அங்கு குழந்தையின் காப்பு ஒன்றைத் திருடியதாக காங்கேசன்துறைப் பொலிசில் புகார் செய்யப்பட்டுள்ளது.

தலைமறைவாகியுள்ள இந்நபரைத்தேடி பொலிசார் வலை விரித்துள்ளனர். (அ)

# வயோதிபர் சடலம்

[பண்டத்தரிப்பு]

கல்லுண்டாய் உப்பளத்திற்கு அண்மையில் வீதியோரத்தில் இறந்து கிடந்த அடையாளம் காணப்படாத வயோதிபர் ஒருவரின் மரணம் பற்றி விசாரணை நடத்திய திடீர் மரணவிசாரணை அதிகாரியும், உத்தியோகப் பற்றற்ற நீதவானுமாகிய திரு. சேனாதிராசா, பிரேதபரிசோதனை நடாத்திய டாக்டரின் அறிக்கையை அடுத்து போதிய உணவின்மை காரணமாக ஏற்பட்ட இயற்கை மரணமென்று தீர்ப்பு வழங்கினார்.

ஆனைக்கோட்டைப் பொலிசைச் சேர்ந்த கான்ஸ்டபிள்கள் திரு. பூலோகசிங்கம், திரு. சோமசிறீ இருவரும் இரவு வேளையில் கல்லுண்டாய் உப்பளத்திற்கு சமீபமாக ரோந்துசுற்றில் ஈடுபட்ட போது பிரதான வீதிக்கருகில் வயோதிபர் ஒருவரின் சடலம் கிடக்கக் கண்டனர். பிரேத பரிசோதனையை உதவி சட்ட வைத்திய அதிகாரி டாக்டர் நவரத்தினம் நடாத்தினார். சடலத்தை அடையாளம் காணும் பொருட்டு யாழ். அரசினர் வைத்தியசாலையில் வைக்குமாறு மரணவிசாரணை அதிகாரி உத்தரவிட்டார்.

# பண்டிதமணி......

(6ம் பக்கத் தொடர்ச்சி)

யது இந்த நிகழ்ச்சியை நாவலரின் தமையனார் புத்திரர் திரு. த. கைலாயபிள்ளை பலமுறையும் கூறுவார். இதனையே பண்டிதமணி மேல்வருமாறு கூறுகிறார்:—"

"நாவலர் பெருமானின் தமையனார் புத்திரர், இருபத்தைந்து வயதுவரை நாவலர் பெருமானின் சந்நிதியில் வளர்ந்தவர், நாவலரின் வித்தியா தர்மங்களின் தரும பரிபாலகர்; ஆறுமுக நாவலர் சரித்திரம்..... எழுதியவர் நால்வர்க்கு ஒளி நெறிநாட்டிய தட்சிணாமூர்த்தியே நாவலர் பெருமானின் ஞானகுரு என்பது ஸ்ரீமத் த. கைலாயபிள்ளை அவர்களின் அபிப்பிராயம்"

"நாவலரின் ஞானகுரு யார்?" என்ற கேள்விக்குப் பண்டிதமணி கூறியுள்ள விடை பொருத்தமானது"


**ஸ்ரீதர்** - யாழ்நகர்

தினசரி 10-30,, 2-30 6-30 & 9-45.

பலகால இடைவெளியின்பின் மக்கள் திலகத்தின் புதுப் படத்தினைக் காணும் சந்தர்ப்பம்!

புரட்சி நடிகர் தமிழக முதல்வர் எம்.ஜி.ஆர்.

புரட்சிக் கன்னி லதா

வில்லனுக்கோர் சக்கரவர்த்தி நம்பியார்

நாகேஷ், தேங்காய், நிர்மலா, கண்ணன் வி. கே. ராமசாமி மற்றும் பலர் நடித்த



**மீனவ நண்பன்**


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

கல்வனைஸ்ட் தெளிவுள்ள
கூரைத்தகடுகள்
35 U S G & 32 U S G
நீளம் 6 அடி முதல் 10 அடிவரை
சி ஐ சி பெயின்ற் வகைகள்

**கதிர் ஹாட்வெயர்ஸ்**
(TILLY'S GROUP)
11 1-2, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம். போன்: 7130


ஈராக்கியர் வெளியேறுதவரை

## போர்நிறுத்தத்திற்கு ஈரான் தயாரில்லை

தெஹ்ரான்)

ஐ. நா. பாதுகாப்புச் சபை கூட்டத் தொடரில் கலந்து கொள்ள ஈரான் இணங்கியிருக்கிறது. ஆனால் தனது பிரதேசத்திலிருந்து ஈராக் துருப்புக்கள் வெளியேறும் வரைக்கும் ஈரான் போர்நிறுத்தம் எதிலும் ஈடுபடாது என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஈராக் அதிபர் ஐனுப் சதாம் ஹுசேனுக்கு அமெரிக்கா ஆதரவளிப்பதாக ஈரானிய பிரதிநிதி குற்றஞ்சாட்டியுள்ளார். செப்டம்பர் மாதம் 11ந் திகதிக்கு முன்னரே ஈராக் எல்லைப் பகுதிகளில் ஈரான் தாக்குதல் நடத்தியதென்று ஈராக் பிரதிநிதி கூறியுள்ளார். இதன் காரணமாகவே இரு நாடுகளுக்குமிடையிலான 1975ம் ஆண்டு உடன்படிக்கையை ரத்துச்செய்யவேண்டி ஏற்பட்டதென அவர் கூறியுள்ளார்.


**கலர்பொலித்தீன்பேக்ஸ்**
மங்கள வைபவங்களுக்கேற்ற
அழகான கலர் பேக்குகள்
விலை 10 சதம், 15 சதம், 30 சதம்
100 பேக்ஸ்! 7-50, 12-50, 25-00
மொத்தமாக வாங்குபவர்களுக்கு
விசேஷ விலை.
உடன் தொடர்புகொள்ளவும்.

**சீக்கோ டிரேடர்ஸ்**
(உட்புறம்)
43, நவீனசந்தை, யாழ்ப்பாணம்.


## துயர நன்றி நவிலல்



காலஞ் சென்ற ஐயாத்துரை குமாரசுவாமி அவர்களின் அன்பு மனைவி பரமேஸ்வரி குமாரசுவாமி அவர்களது இறுதிச் சடங்குகள் நடந்த 22-9-80 அன்று நேரில் கலந்து துயரத்தில் பங்கு கொண்டவர்களையும் அனுதாபச் செய்திகள் அனுப்பியவர்களையும் இன்னும் இன்னோரன்ன வழிகளில் உதவிகள் புரிந்தோரையும் இதயத்தில் நிறுத்தி நன்றி கூறுகின்றோம்.

**குமாரசுவாமி குடும்பத்தினர்**

"உத்தமி இல்லம்"
கல்வளை,
சண்டிலிப்பாய். 7052

# பொதுப்பிரச்னைகள் மீது நவ. 22-ல் ஐந்துகட்சி பொதுக்கூட்டம்

## இன்றையக் கூட்டத்தில் கூட்டணி கலக்காது

(யாழ்ப்பாணம்)

பொதுப் பிரச்னைகளை முன் வைத்து ஐந்து கட்சிகளின் கூட்டமொன்று நவம்பர் 22-ம் திகதி நடத்தப்படவிருக்கின்றது. இக்கூட்டத்தில் சிறிலங்கா சுதந்திரக்கட்சித் தலைவி திருமதி சிறிமா பண்டாரநாயக்காவின் குடியியல் உரிமைப் பிரச்னையும், பொதுப் பிரச்னையாக விமர்சிக்கப்படலாம் என்று தெரியவருகின்றது.

அதற்கு முன்பதாக எந்த ஒரு பகிரங்கக் கூட்டத்திலும் சகல கட்சிகளும் கலந்து ஆலோசிக்காத நிலையில் தமிழர் விடுதலைக் கூட்டணியினர் பங்குபற்ற மாட்டார்கள் என்று தெரியவருகிறது.

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி (சண் தலைமை)யும் இதே விதமான தீர்மானம் ஒன்றை எடுத்திருப்பதாக அறிய முடிகின்றது.

பொதுப் பிரச்னைகள் தொடர்பாக தமிழர் விடுதலைக் கூட்டணி செயலாளர் நாயகம் விடுத்த அறிக்கை ஒன்றில் பின்வருமாறு தெரிவித்தார்.

### அமிர் அறிக்கை

இலங்கையில் மக்களை வாட்டி வதைக்கும் வாழ்க்கைச் செலவு உயர்வு, பங்கீட்டுணவு நிறுத்தம், பயங்கரவாதத் தடைச் சட்டம், அத்தியாவசியச் சேவைச் சட்டம் வேலைநிறுத்தத்தால் வேலை இழந்தோர் பிரச்னை ஆகியவற்றை முன்வைத்து, தமிழர் விடுதலைக் கூட்டணி, ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சி, லங்கா சமசமாஜக் கட்சி, இலங்கைக் கம்யூனிஸ்ட்கட்சி (சண்), மக்கள் ஐக்கிய முன்னணி ஆகிய கட்சிகளின் சார்பில் நவம்பர் 22ந் திகதி கூட்டமொன்று நடத்துவதாகத் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. அதற்கான ஏற்பாடுகளை இளைஞர் பேரவை அமைப்புச் செயலாளர் திரு. மாவை. சேனாதிராசா செய்து கொண்டிருக்கிறார். இதற்கிடையில் யாருடனும் கலந்து யோசிக்காது யாழ்ப்பாணத்திலுள்ள சிறீலங்கா சுதந்திரக் கட்சியினர் இன்று (12ந் திகதி) திருமதி பண்டாரநாயக்காவின் குடியியல் உரிமை பறிக்கப்படவிருப்பதைக் கண்டிக்க ஓர் கூட்டத்தை ஏற்பாடு செய்திருப்பதாக அறிகிறோம். ஏனைய கட்சிகளோடு கலந்து ஒழுங்குசெய்யப்படாத இக் கூட்டத்தில் த. வி. கூட்டணி கலந்துகொள்ள மாட்டாது. இப்படித் தனிப்பட்ட நடவடிக்கைகளினால் எதிர்க்கட்சிகளின் ஒற்றுமையைக் குலைக்க வேண்டாமென்று கூட்ட ஏற்பாட்டாளர்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

## ஐ. நா.வில்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சி. போன்றவர்களிடம் இன்றுள்ள நிலைமையை எடுத்துக் கூறினேன். அவர்கள் புத்திசாலித்தனமானது எனப் பாராட்டினார்கள். அப்போது அங்கிருந்த திரு. வைகுந்தவாசனும் எங்கள் முடிவை ஏற்றுக்கொண்டார்.

காணி கிடைக்கு முன் எமக்கு கிடைத்துள்ள ஆட்சி உரிமையைக் கொண்டு முழு உரிமை பெறும் வரை அக்காணியில் பயிரிட்டுப்பயன் பெறுவோம். தமிழ் இனத்திற்கு சுதந்திர தமிழ் ஈழம் கிடைக்கும் வரை உழைப்போம். (க)


## தேவை

எமது நிறுவனம் "மீன் விற்பனை நிலையம்" (FISH STALL) ஒன்றை நிறுவுவதற்கு, யாழ்ப்பாணம் பெரிய கடையில் கட்டிடம் ஒன்று வாடகைக்கோ அன்றி குத்தகைக்கோ தேவை.

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி.

பொது முகாமையாளர்
சி - நோர்
காரைநகர்.

தொலைபேசி இல: 804 7044



## விற்பனைக்கு
22 ஸ்ரீ 589

குறித்த இலக்கம் கொண்ட மோட்டார் ஒஸ்ரின் லொறி விற்பனைக்கு உண்டு. இதற்கான கேள்விப்பத்திரங்கள் 20-10-80ந் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

முகாமையாளர்,

**த பினன்ஸ் கம்பனி**
**லிமிட்டெட்,**
249 சி, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 7680


## மரண அறிவித்தல்
### திருமதி மகேஸ்வரி ஆசைப்பிள்ளை

இளைப்பாறிய யாழ். இந்துக்கல்லூரி அதிபர் திரு. V. M. ஆசைப்பிள்ளை அவர்களின் அன்புமனைவி திருமதி மகேஸ்வரி ஆசைப்பிள்ளை அவர்கள் காலமாகி விட்டார். அன்னாரது பூதவுடல் இன்று காலை 12-10-80 9 மணியளவில் றக்கா ஒழுங்கையைச் சேர்ந்த அவர்களது இல்லத்திலிருந்து ஈமைக் கிரியைக்காகச் செம்மணி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.
7077


**யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்** (வரையறுக்கப்பட்டது)
குறைந்த செலவில் நிறைந்த சேவை

# புகைப்படப் பிரதி (போட்டோ கொப்பி)

எந்தச் சான்றிதழ், ஆவணங்கள், வரைபடங்கள் ஆயினும்
பிரதி செய்து கொடுக்கப்படும்.

**பிரதி ஒன்றிற்கு -75 சதம் மட்டும்**

**யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்**

பிரதான கிளை
மின்சார நிலைய வீதி -- யாழ்ப்பாணம்.
74/3, ஆஸ்பத்திரி வீதி, (ஆஸ்பத்திரிக்குப் பின்புறம்)
யாழ்ப்பாணம்.


இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் ... மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் அக். 12-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registred as a News Paper at General Post Office Sri Lank under No. GB 8948/78 The Eelanaadu P. B. No. 49, Telegram Eelanaadu, Phone, 389.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org